ருட்டபிநருக்கண்மாலொத்தசைந்தவே. (௧)

கொன்றையுமரவமுங்கூவிளங்களுந்
தோன்றுநீடருவியஞ்சனைகொள்கங்கையு
நின்றனைசந்துபிதலாலிபிநமால்வரை
மன்றலந்தெச்சஞ்சடைவானமானுமே. (௨)

அந்தமால்வரையிடத்தடங்குவிந்தாங்
கந்தநீர்லொற்பலக்கனையில்சாடகின்
முந்துவானவர்க்கெலாமுதன்மையிச்குய
ரிந்திரன்விழிகளாயிரமுமேற்குமே. (௩)

கரிகளும்பிடிகளுங்கன்றும்வெஞ்சின
வரிகளுமரிகளு டவிரும்பாங்கெலா
நரிகளுமாய்களுநஞ்மாயுக்களும்
பரிகளுமான்களும்பயின்றலாவுமே. (௪)

குஞ்சரக்கன்றுகண்முழக்கிற்கோளரி
யஞ்சிநம்முழையிடிந்தகன்றிடாதசம்
விஞ்சொலிசெவிப்படவெய்யவேங்கைக
ளுஞ்சிடாதிரமெலாந்துஞ்சுக்குற்றேறங்குமே. (௫)

மயிலினஞ்சாயலஞ்சுகங்கள்வாய்மொழி
குயிலுடைவண்சுரங்குறிஞ்சிதங்கிய
வெயிலுமிழ்பூண்மினார்வெறுப்பதாவது
முயன்மதிக்கேயவர்முறுவல்பூப்பதே. (௬)

மஞ்சடைக்கணங்களுராகணங்களுந்
சஞ்சரித்துறங்கிடாசசாரலில்லையா

னஞ்சணிவிழியிணைமறவர்நங்கைமார்
பஞ்சடிச்சுவடிலாப்பாறையில்லையே. (௭)
காமமுங்கோபமுங்களிப்பும்வாட்டமு
மேமமுங்காண்பரிதெனினுநாடொறு
மோமமும்வேள்வியுமுயருமாகுதித்
தூமமுமாதவர்சூழவிலங்குமே. (௮)
வாரணவோசையும்வயங்குபொன்கொழி
நீரணவோசையுநெறிபுலப்படு
மாரணவோசையுமதிர்ந்தொலித்ததாற்
காரணமுனிவர்வாழ்கந்தமாதனம். (௯)
ஆங்கிவனணுகியேயந்தமால்வரைப்
பாங்கெலாமுணர்ந்தபின்பயந்ததந்தையார்
தாங்கியபெருந்தவச்சாலையெய்தியே
பூங்கழல்பணிந்தனன்பொருவின்மைந்தனே. (௰)
வருவதயின்முன்னரோமைந்தன்றன்வலி
பெருகிமோறெலாம்பெயர்ந்தறிந்தவ
னிருவகயாற்றழுவியாங்கினியவாசிசொற்
றருகினான்சிந்தையுமுடனுமாமுனி. (௰௧)
வந்தவாறனைத்துமம்மாமுனிக்கிவன்
சிந்தையார்ந்திடும்படிசெப்பிநிற்றலு
மந்தணன்வாழ்த்திநல்லமுதுவவ்வியே
யுந்திமீண்டிடவரமுதவினனரோ. (௰௨)
மைந்தநீபோதியென்றுரைப்பமற்றவன்
றெருந்தியிற்சுடும்பசிதூரப்பவேண்டுமென்
றந்திவானத்தினையாக்கைதாங்கிய
வெந்திறற்றுக்கியன்விளம்பிப்போற்றினன். (௰௩)
(வேறு.)
அந்தமைந்தனுக்கருண்முனிபுகலுவானையா
வந்தமால்புரம்வாழும்விசுவாவசுப்பெயரோ

னந்தனைாளுண்டருநிதியளப்பறப்படைத்தே
சிந்தைதான்களிகூர்ந்திடத்திருவினிற்சிறந்தான். (௰௪)

ஆனையவன்றனக்கிளவலெட்டாந்திசையானைத்
தனதுபேரினைத்தாங்கினோன்றம்முனையனைத்தி
யெனதுபாகமின்றளித்தியுள்ளமெலாமெனக்
கனவிறுஞ்சுடுகண்ணினுங்கவிட்டனைமுனிந்தான். (௰௫)

அரியொலித்திடமதச்சுவட்டானையாய்ப்புவியிற்
றிரிகவென்றிளையோன்றனைச்சபித்தலுஞ்சிறிப்
பெரியகூருமமாகிநீபெயருதியென்றே
புரியுந்தம்முனைச்சபித்தனன்புவியெலாமுணர. (௰௬)

ஆறியோசனையகலமற்றிரட்டியாங்குயர்ச்சி
யீறியானையாய்ப்படர்ந்தனன்பின்னவன்வேதங்
கூறுமுன்னவன்கூருமநல்லுருத்தாங்கி
யாறுமூன்றுமாமியோசனையளவையினமர்ந்தான். (௰௭)

இருவர்வேறுருவெய்தியும்வயிரம்விட்டிலராய்ப்
பொருதுநின்றனர்புணரியினுப்பணிலதனுன்
மருவுயிர்த்தொகையாவதும்வருந்தியகண்டாய்
வெருவல்சென்றுநீவிழுங்கவர்தமையெனப்பணித்தான். (௰௮)

சொன்னவாசகங்கேட்டனன்மகிழ்ந்தனன்றொழுதான்
பன்னகாசனவயிரியாகாயமேற்படர்ந்தான்
மன்னுவாரிதியிடையிருவல்லுயிர்தனைக்கண்
டுன்னுமுன்னரிற்கானகத்தறைந்துகொண்டுயர்ந்தான்... (௰௯)

விண்ணளாவுமோர்வடதருச்சினைமிசைமேவி
யண்ணறங்கலுமப்பெருஞ்சாகைதாங்கிலதாய்ப்
பண்ணமைந்தநூறியோசனைப்பரப்புடன்முறிந்து
மண்ணில்வீழ்தல்கண்டஞ்சினன்மாமுனிமைந்தன். (௨௰)

அங்குலங்களினளவுடைவாலகில்லியர்க
டங்கியேதவம்பயிற்றியதன்மைகண்டானே

மக்குமாருயிர்ச்செறாகை யெனமனையெ [illegible] க்காமே
பங்கயப்பகுதத்துறைந்தனன் பணையைப் பதி. (௨௧

வலக்கயானை [illegible] டவைகியகூருமந்தையாய
நிலத்தி [illegible] டா [illegible] றந்து யகாண [illegible] டருபடை நிமிர்ந்து
குலத்தி [illegible] மாமுன [illegible] ற்படிகோட்டி னை [illegible] வா
னலத்தகந்தமாதன [illegible] மலுமவில் [illegible] லமன்னனி. (௨௨

சற்றைத்தனனிரு [illegible] விர்வன [illegible] முறை [illegible]
யிந்தவாஸ் [illegible] குய தெயவனைம் [illegible] வாழ்
வுந்துவ [illegible] நீ [illegible] யமெதய்வ ணைபூணாத த
முற் [illegible] யமாவவிட த [illegible] ந்து றை முறைறமே. (௨௩

அந்த [illegible] பாங்சரிறுகர்ந் [illegible] டிலாருயிர்த் [illegible] சாலைகள்
கெ [illegible] ததுதி வினைகட [illegible] ய [illegible] றடை [illegible] னம்மே நணமை
ய [illegible] த்ததநசை [illegible] நரு [illegible] யம னழ்பாலை
வி [illegible] த்தமாதவா குழுமே யவயினை னைவியந்தார். (௨௪

என்றுரை [illegible] கள்ளமைந்தனுக்கிருடியபிரந்தி
வென்றிமி [illegible] குவாலகில [illegible] யா [illegible] னைவிரிந்தூக்
சென்றிடத்தருயு [illegible] மொசங்கர [illegible] கி [illegible] சா
னன்றுமற்றவர்மைந்தனைவாழ்த்துவிட்டகன்றார். (௨௫

நானிலத்திடைபனிக்கிரிக்கொருடனை [illegible] நிதிர்
மாவிடகிரியுள நவனை வடச்சனைவி [illegible] க்கு
ம [illegible] மெ [illegible] விருந்துநிந்துதவம் [illegible]
மேபானகத [illegible] னைப்புசித்துநிமயமன் றனம்பனிதன். (௨௬

(வேறு.)

அன்னது [illegible] செய்ய [illegible] ன் [illegible] றுவருந்த [illegible] ற [illegible] பினமேதயான்
மனை [illegible] நிர [illegible] னி [illegible] த் [illegible] ம [illegible] ழ்சினையைநீககிப்
பொ [illegible] னவிரிமடசசா [illegible] புதந்த [illegible] ண [illegible] யிருநுப்பித்
தன்மனைப்பொருவரின் திட்டகமெபலாம்தனியுழுமீண்டான். (௨எ)

கந்தமாதனச்சருக்கமுற்றிற்று. ஆக-கவி. ௬௭௨[illegible].

அமிர்தங்கொணர்ந்தசருக்கம்.



மதத்தமாவினையுமாற்றன்மாற்றருமியற்கைபூண்ட
சுதத்தொருசமடமென்னுங்காத்திரவனையுந்துய்த்து
விதத்துறுதாதையோம்பிநதையைநினைந்துவிண்ணோர்
பதத்திடைப்புகுவதுன்னிப்பறந்தனன்பறவைவேந்தன். (௧)

பன்னகவயிரியந்தப்பதியிடையணுகாமுன்னந்
துன்னிமித்தங்கள்கண்டேசுரர்பதிவெருவியாங்குப்
பொன்னெனும்பெரியோன்றன்னைப்புகழ்ந்திருகரங்கள்கூப்பி
யென்னிதுபுகறியென்றனிதுவெலாமுணர்ந்துரைப்பான். (௨)

கேட்டிநீமகத்திலேவந்தேசேடில்காசிபனார்தந்த
தாட்டுணைவயினதேயன்றாய்க்குறையகற்றுமாறு
நீட்டுபோராற்றலோடுநிமிர்ந்திருசிறகுவீசி
நாட்டிடையடைந்தானின்னாலியலாந்தகையனன்றால். (௩)

புத்தமுதெடுத்துமீண்டுபுகுந்துகத்துருவைச்சேர்ந்து
வித்தகத்தாய்தன்னைவல்விலக்குவான்மேவுகின்றா
னெத்தகையோர்க்குங்கூடாவிபத்தொடுமலைந்தகூரு
மத்தையுமயின்றான்மேருவரையையுமதிக்கலாதான். (௪)

மறந்தனையையநீமுன்மாமுனிகாசிபற்கே
யறந்தருபுதல்வன்வேண்டியருமகம்புரியுநாளிற்
சிறந்தநெய்ச்சமிதையோடுசிலபொருடந்துபாங்க
ருறைந்தனையனையாதியும்பரும்யானுமுற்றேம். (௫)

அன்னகாலையினங்குட்டத்தாக்கையர்வாலகில்லியர்
மன்னுதம்முடலுக்கேற்றசமிதையுமற்றுங்கொண்டு
துன்னினாரதனைநோக்கிநகைத்தனைதுனிபொருமு
வின்னமாமுனிவர்கண்டுசீறியொன்றெடுத்துரைத்தார். (௬)

காசிபன்றனக்குத்தோற்றுங்கான்முளைகடவுளோர்கட்
கேசறவிளங்கிரண்டாமிந்திரனாகவென்றே

பேசிநல்லவிகடந்தபெற்றிகண்டவரையேத்தி
வாசவமறுகிநின்றேமாற்றுமென்பிழையையென்றாய். (எ)

மாதவர்மனமிரங்கிவந்திடு மகவுமேலா
யேதநீர்பறவைக்கெல்லாமிந்திரனுகவென்றே
யோதுவாரன்னபான்மைக்குநித்தயமினிமேனகண்டாய்
கோதிலானவருந்தறன்றுற்றுகொடுஞ்சமர்விளைத்திண்ணம். (அ)

தடுத்தமர்புரிந்தபோதுந்தண்ணமுதினைநுஞ்செங்கை
விடுத்திடல்சரதமிந்தவிம்மிதமதற்கேயென்று
ணடுத்தநல்வியாழமென்னுமாரியனமரர்வேந்தன்
கடுத்தவாண்முகத்தநோக்கிக்காண்குவன்கவர்தலென்றான். (கூ)

நல்லபுத்தமுதுகாக்குநலனுடைக்காவலாளர்
வல்லவர்தம்மைக்கூவிவருவனதெரியக்கூறி
யொல்லையிற்காவலாக்கியும்பருமியக்கர்தாமுஞ்
செல்லுதவுருமும்போலத்தெழித்திடவிருந்தானன்றே. (ய)

(வேறு.)

மாமுகிற்குலமியங்குதலொழிந்துமுகமாதியட்டதிசையுஞ்சிதறி
றொந்துகுகை, நாமநற்பிலமடைந்தனதிசைக்கரட நாகமெட்டும
யர்கின்றனபெருந்திறல்கொ, ளேமவெற்புடையருங்குவடொடிந்து
கடலேழினுக்குமயலின்புடைவிழுந்தனதண், வாமநற்புணரிபொ
ங்கியலைசென்றமரர்மாதர்பொற்றுகினனைந்திட வெறிந்துளதரோ.

பூழிபட்டதிசை யெங்கணுநெடுங்கிரிகள் பூளைபட்டபடியம்புவி
மன்றந்துவளை.யாழிபட்டபெயர்வண்கிரிசுலைத்துரகராகுலச்சலதி
கண்டிடவியங்கியொளிர், மாழைபட்டபுவியெங்கணுநடுங்கியுயர்மா
மறைப்பிரமனுங்கலையுகஞ்செய்பெரு, மூழிபட்டதுகொலென்று
தளரும்படியிரேறுதைமிக்ககலுழன்சிறகசைந்தபொழுதே. (யஉ)

வாயுவுட்கவருசெங்கதிருமஞ்சவடவானலக்கனலவிந்திடவடுஞ்ச
மனு, மேயவெற்றிமதியுந்தலையிறைஞ்சவுயரோசிவுற்கைகளுதிர்ந்
திடவெதிர்ந்தமரர், நாயககுரிசில்வைகுடதிசென்றளவினுகருட்கி

அமிர்தங்கொணர்ந்தசருக்கம்.

படல்வெஞ்சினமிகுந்தமுனி, சேயினைட்படை வளைந்தருமிலும்
பெரிதுச்சிறந்தசமர்புரிந்தனரருந்திறல்கொண்டே. (௰௩)

(வேறு.)

மழுவினுற்சிலர்வண்கதையாற்சில
ரெழுவினுற்சிலர்தடிகளாற்சிலர்
கொழுவினுற்சிலர்கூர்ங்கணைமாரிகள்
பொழிவினுற்சிலர்போர்புரிந்தாரரோ. (௰௪)

மாகாவந்துவளைந்திடவேமண
லேகமாய்ஹுய்ப்பிடச்சுயாளனும்
பாகவல்சுலறவாயிபரப்பியே
மேகமென்னவினாதமெதிராயினன். (௰௫)

தொட்டவாங்கணைகுலங்கடோமரம்
பட்டுநாந்துபரிம்பொடிடானவா
லட்டதிக்கினரிபரிரிந்தனர
மட்டிலாவவனவஞ்சிறைகோற்றினால். (௰௬)

தெற்றிசைக்கணிடமேறவருமெற்றிசை
திற்றநாகினிருபருக்கிப்புறம்
வென்றிவெண்மாவிபாகரராதியோர்
சென்றுவீழ்ச்சிறகைசைத்தனரோ. (௰௭)

ஒருவர்போமிடமொருவருணர்ந்திலார்
செருவிரினறயாவுந்தேயபினின்
மருவுநல்லமுதநிறைமுழைவயிற்
பொருவிறந்தவனேபோய்ப்புகுந்தானரோ. (௰௮)

அந்தநல்லமுதத்தையளித்திடுஞ்
செந்தழற்பிழம்பொன்றுசெறிந்ததால்
வந்தவேதுயமைந்தனுணர்ந்துபோ
யிந்தவானதநீர்வர்ந்தெய்தினன். (௰௯)

விரித்தபோதினில்வேலைகளேழினு
லடுத்தவாழியனலையவித்தல்போன்
படித்தலத்திகழும்மாறினமீளவுந்
தடித்ததாங்கொருசக்கரமென்பவே. (௨௰

சேமருஞ்செறிந்துளதெள்ளமு
தேமருங்கலசத்திடைப்புக
வாமருமொடுக்கிவயங்கனுக்
காமருவுற்றடந்தனனுழியை. (௨௧

வெற்றியோடமுதத்திடைமேவனு
முற்றசாலிரண்டுத்தமவாளராச்
சுற்றிநின்றருகெய்தருந்தொன்மையைச்
கற்றவன்கண்டுகண்சிவந்தானரோ. (௨௨

உரகமங்கிரண்டுந்தலைவானுற
விரகிற்காலின்மிதித்துக்கிழித்தபின்
சரதமிக்குளதாமரைமாலையான்
கரதலத்தமுதேந்திக்களித்தனன். (௨௩

மீண்டுவானின்மிளிர்ந்தவனேகலும்
பூண்டவிந்திரனெய்திப்பொருத்திலன்
றாண்டினன்வயிரந்தனைத்தோன்றலைத்
தீண்டியோர்பொற்சிறைமயிரட்டதே. (௨௪

அனையகாலையிலண்ணலுக்கோதுவா
னினைவிலாதெனைநீயடர்த்தனை
முனைவனத்திபுமுன்னவனேவலு
மனநின்றியளித்தனனோர்மயிர். (௨௫

அன்றுதிர்படையாற்றலுக்கிந்திலேன்
சென்றையைகுதிமீண்டெனச்செப்பியே
குன்றம்போல்புவன்கொற்றமொடேகினு
னின்றுபோகிநினைத்தனன்மாலையே. (௨௬

(வேறு.)

செறித்தபசுந்துகிலிகழமகுடமோங்கச் செங்கையொளிவாய்ப்படையுந்தேசுகாட்ட, நிறைத்தபடலையந்துளவுகமழக்காதிலிலகுநற்குண்டலங்கள்சுடர்கவைப்ப, வெறித்தகவுத்துவமணிமார்பிடையிற்பிலேறுங்கவினிமையவருருமிவருமிறைஞ்சுமேயதகுக், குறித்தகருடனுக்கெதிர்வந்துதித்துநின்றான் குவலயம்போர்பருகுந்தவந்த கொண்டல்வண்ணன். (௨௭)

கைத்தலமாமலர்குவித்துவணங்கிவாழ்த்திக் கருடனெதிர்நின்றவவிற்கரியமேனி, முத்தனிதுமொழிகின்றா னருளாலன்றா முனையைநெறிவழிவேக முதன்மைதன்று, யொத்தவர் நின்னிகரொருவரிலையென்றுமினிப்புவனமேநோக்கவந்தெழுந்தேநாமுனக்குவேண்டுந், சுத்தமுறு வரங்கேட்கிற்றருதுமென்னத் தூயகருத்துடையவினைதேயன் சொல்வான். (௨௮)

நிலமதனி னெறிமுறைமை தவறாதுக்கி நினதன்பு மறவாமனெடுநாள்வாழக், குலமுகிலேயளித்தியெனவினிதேயென்று கூறியொருமொழிபுகல்வான் குமரநீயிங், கிலகுநமதார்தியுமாட்கொடியுநியாயிருத்தியுனக்கெதிரொருவரிலையென்றான், சிலைமதனகர்வனப்பான் மகிழ்ந்தவ்வாய்மைச் சிரங்கொண்டானிந்திரனுஞ்சேர்ந்துசொல்வான். (௨௯)

அதிதிதருமகனுனீவிநதைமைந்தனுத்த னிருவருக்கொருவனுக்குமேலெல்ப், பதியனுகியிமையவர்களுயிர்கொண்டேகும்பரிசெமனைவழுதேற்றிப் படர்தனன்றே, மதியுடையையறனுடையையெறிவழாத வனுடையைநீயுணராவகையொன்றுண்டோ, புதியவமுதெமக்களித்திப்பிறர்பானெரிற்பொருளாமோவெமக்குதவிப்புகழ்கொளென்றான். (௩௰)

வாசவன்சொற்செவிபுகலுங்கருணைமேவிமலர்ச்சரங்கள்குவித்துரியமனத்தின்வேந்தே, பேசுமெனதன்னைகுறைதவிருமாறுபின்னைள்கத்துருவைமுதற்பெற்றதொல்லை, மாசுணநற்குழுவினருக்கமுதமீவானவந்தனனொன் வாய்மைபிலைபூவரினுநன்றே, வீசுபுகழ்பவீன்றேவலாற்றிவெறுத்திருப்பதிலைத்தோவிளம்பாயென்று

பருப்பதங்கள்பிரசண்டவேகக்காற்றாற் பறக்கின்ற பூளையெனப் படுத்துமாற்றற், பொருப்பனையவிருபுயத்தானுளைத்தமாற்றம்புரந்தரன்கேட்டோருறுதிபுகறலாலும், விருப்புறுநீயமுதவருக்களித்துன்வாய்மை விளக்கினைதன்னையொடுமீண்டபின்னர்த், திருப்பியமுனிவனைகவர்வனவர்க்கெய்தாமற் றேவர்கட்காவிவ்வாறு செய்கவென்றான். (௫௨)

அதற்கிசைந்தே பன்னகவயிரிநன்றென் றருள்டரிந்தான்வாசவனுமகமகிழ்ந்தே, மதுத்தாடையாய்நின்றனைவல்லனதன்றிமற்றுமெனக்கினிநண்பும்வலியுநீயே, கதித்தவரம்வேண்டுவதுகழறிலீவன்கட்டுரைத்தியெனமொழிந்தான்கலுழன்கேட்டே, விதித்ததிறற் கத்துருவை யளித்தமைந்தர் விளைந்தெனக்கேயுணவாக விளம்பாயென்றான். (௫௩)

அவ்வண்ணம்வரமுதவியாசிகூறி யமரரொலாமிகமகிழ்ந்தாரரியுமீண்டான், மைவண்ணமகவானுமருவமாகி வரவயின்ன புவிசார்ந்தேயமுதங்காட்டி, யுய்வண்ணத்தாயேவலகற்றியாங்க ளுறுதருப்பையிசையமுதமெய்த்துநீவிர், மெய்வண்ணஞ்சுசியாட்வந்தருந்துமென்றே விளம்பியிவனன்னையுடன்மீண்டுபோனான். (௫௪)

மற்றவனுங்ககன்றிடலுஞ்சேடனாதிமாசுணங்க ணீராடிவருவான்போனார், கற்றமகபதியணைந்தேயமுதந்தன்னைக் கவர்ந்தகன்றாககணத்திற்காவலாக்கிக், குற்றமறவினிதிருந்தான்பின்னர்மீண்ட குமுரமுனிவனைக்காணார்குறைந்துவாடி, யுற்றதருப்பையைநாவான் மேவினீவ வுரகங்கட்கிருநாவென்றுற்றதம்மா, (௫௫)

அசும்பிருந்தபுத்தமுதுதாங்கலாலே யரும்புனிதத்தருப்பையுமன்றுயதேயால், விசும்பளவுமுயர்ந்த முடியுரகராரும் விம்மிதராய்மனம்புழுங்கிவெறுத்திருந்தார், பசுந்திருமால்பதாகையுநற்பரியுமாகிப் பாப்பசனஞ்செய்துமறை பன்னுநிற்கும், கசிந்தகடன்முறையியற்றிக் கலுழன் வாழ்ந்தான். காதைபடித்தவர்வீடு கண்டோர்தாமே. (௫௬)

அமிர்தங்கொணர்ந்தசருக்கமுற்றிற்று. ஆக கவி. ௫௬.

இன்னவாறெலாமிருந்துநோக்கியே
மன்னுசேடனுமாசிலாதவன்
சொன்னதீயர்தந்துணைநீங்கியே
பொன்னினின்மால்வரைப்புறத்தின்மேவினான். (௧)

எண்ணிறந்தநாளிருந்தவத்திடை
நண்ணுமொலையினான்முகத்தவன்
பண்ணினைத்தியேபரிந்துசெம்மனின்
னெண்ணமேதுகொலீதுமென்றனன். (௨)

வட்டவார்கழல்வணங்கியென்னுடன்
றுட்டர்தோன்றியேதூயதாயுடன்
மட்டிலாவலிவயினமேதயனை
யிட்டமின்றியேயிடர்படுத்தினார். (௩)

ஆதலாலவரன்னைநீக்கியே
காதலாற்றயங்கருதிவைகினே
னீதலாற்பிறிதெண்ணமில்லையென்
றோதலாற்களித்துளைப்பன்வேதனே. (௪)

(வேறு.)

நன்றுநினதுண்மைநெறிஞானமுணர்வுற்றோ
மின்றுமுதலன்னவரிலெண்ணலகடனன்றால்
வென்றிபுலகேசையும்விறற்புயமிசைக்கொண்
டொன்றுறநிலைக்கொடொழிலுன்வயினளித்தேம். (௫)

பாதலமணைந்துலகுபாரமதுதாங்கி
மீதுமறையாதிகலையாவையும்விளக்கி
நீதியொடுவாழ்திவலிநீடுமுவணற்கே
யோதுபகைநின்வயினுறாதெனவிசைத்தான். (௬)

அன்னவனுநீயுமனமொன்றியருணண்பாய்
மன்னுதிரெனப்

யுன்னரியபொற்சிறைகொளோதிமமுகைத்துத்
தன்னுலகடைந்தனன்விதாதவெனுநாமன். (௭)

மாசறுபணா மணிவயந்தருசிரங்க
ளாசகலவாயிரமடுத்தவனுமங்கண்
வாசமலர்வள்ளறருமாறுலகமெல்லா
மோசையொருசென்னியினிருத்தியவனுற்றான். (௮)

சேடனகலக்கொடியதீவிடமிடத்தோர்
பாடமைகொள்வாசுகிமுதற்பலருமுன்னி
நீடுதமதன்னைமகனோர்ந்துடையசாப
மோடும்வகைசிந்தனைசெய்துற்றனர்களோர்நாள். (௯)

(வேறு.)

தவத்தினான்மிகுந்தவன்றகுதிவாய்மையான்
பவத்தினைநீக்கியபரமமூர்த்தியான்
சிவத்தினைமறந்திலாச்செல்வம்வேண்டினோன்
கவித்துளபெயர்சலத்காரவேதனே. (௰)

அன்னவன்பிரமசாரியத்தினன்பினாற்
றன்னியற்கடனெலாந்தாங்கிவைகுநாண்
முன்னவன்குரவர்மூவெழுவர்தங்களை
யந்நிலைநரகிடையமிழ்த்தவேண்டியே. (௰௧)

அறப்பெருங்கடவுடானறிந்துதள்ளலாற்
சிறப்பிலார்வடதருச்சினைவிடுத்தநூன்
மறுக்குறப்பற்றியேவாவல்போலவே
குறிப்பருநிரயத்திற்கெதிர்குலாவினார். (௰௨)

மாதவமிகுசலற்காரமாமுனி
பாதபத்தருகினிற்படர்ந்துநோக்கலு
மேதிவரித்தவமிழைத்தலென்றுணர்ந்
தோதுவானவர்களுக்குயர்கைகூப்பியே. (௰௩)

வடத்துடைவிழுதுறவாவல்போன்மிடைந்
துடற்றியவித்தவத்துறுதிதேர்கிலன்
றிடப்படவுணாத்திரோற்செய்துமித்தவங்
கடைப்பிடிமுனிவர்காள்கழறுவீரொன்றான். (௰௪)

வாசகங்கேட்டலுமகிழ்ந்துமற்றவர்
பேசியதவமிதுவன்றுபெற்றிகொ
ளீசனையனையஃதெனமனுகால்வழி
மாசிலாக்குமரனிப்புவியில்வாய்த்துளான். (௰௫)

அன்னவன்பெயர்சலந்காரனாகுமான்
மன்னுமில்லறத்துடைமாண்புதாங்கிலன்
சொன்னவன்குரவரோந்தொலைவின்மாநர
கின்னிடைதள்ளினரிதனைப்பற்றினேம். (௰௬)

கருப்பையொன்றிச்சினைகதித்துநின்றதால்
விருப்புடன்றுணிந்தினிநிரயம்வீழ்குவோ
மிருப்பதாமெஞ்செயலென்றுகூறினர்
பொருப்புறைபவனிகர்புனிதன்கூறுவான். (௰௭)

ஐயநுங்குலத்தினேனடியனாகுமால்
வெய்யதென்றில்லறம்விருப்பமுற்றிலேன்
றையலைவேட்டுநுந்தாழ்வுநீக்குவன்
செய்யுமாறொருவருஞ்சிறந்தளித்திரால். (௰௮)

என்பெயர்தன்பெயரோகநாமமாம்
வன்புயர்கற்பணிமங்கையுண்டெனி
லன்புடன்மணமுடித்தருள்வனவ்வர
மின்புறவருள்செய்வீரொன்றுபோற்றினான். (௰௯)

அன்னவரகமகிழ்ந்தனையபேருடை
மின்னனையெய்துநீவேட்டுவாழ்கெனச்
சொன்னலமுறவுணாத்தினிதிற்றாண்டினார்
பின்னவர்துயர்தவிர்ந்துலகப்பெற்றனர். (௨௰)

மாமுனிதன்பெயர்மங்கைநாடியே
பூமிசையெய்துநாள்புயங்கநாயகர்
தாமிருந்துசாவியதலத்தையண்மினான்
கோமுனிதனைப்பணிந்துளங்குளிர்ந்தனர். (௨௧)

அன்னவருடன்வருமணங்கனாடிறன்
மன்னியவிறற்சலற்காரைமங்கையா
மின்னனையாள்வடமீனையொப்பவள்
பொன்னடிதொழுதந்தமுனியைப்போற்றினாள். (௨௨)

ஆரிவளறைகுவீரதியவென்னனு
நேரிலாவாசுகிநின்றுகூறுவான்
சீரினாலெம்முடன்சிறப்பிற்றோற்றிய
பேரியனுடைச்சலற்காரைப்பெண்கொடி. (௨௩)

என்னனுந்திருமுனியிரங்கியன்புடன்
பன்னருங்கற்புடன்பண்புநோக்கியே
கன்னியாமோவெனக்களிப்பினாமெனத்
தன்னுளமகிழ்ந்திதுசாற்றன்மேயினான். (௨௪)

தென்புலத்தோர்துயர்தீர்க்கவேண்டியா
னெம்பெயர்க்கன்னியையிசையும்வேட்கையாற்
புன்புலத்திடையெலாம்புகுந்துதேடினேன்
வன்புறத்தினிலிவள்வைகல்காண்கிலேன். (௨௫)

கூடியபொழுதலாற்குறித்தியற்கையா
னாடியவளவினினயந்துசேருமோ
தேடியதிதுவெனச்செப்பவன்னவர்
வாடியதிருவுளமகிழ்ந்துசாவினார். (௨௬)

வானவர்பூவயன்மருங்குநண்ணியே
தேனமர்குழலிமுன்செய்தசாபத்தா
லீனமாயரவெலாமிறந்திடாவகை
தானினியோர்வரந்தாவென்றேத்தினார். (௨௭)

அன்னவனேறுதூவாலவருடன் வருங்
கன்னியையவள்பெயர்கவினுமாதவன்
பன்னியாயளிக்கிலோர்பாலன்றோற்றியே
துன்னிவர்சாபமுந்துடைப்பன்போமினே. (௨௮)

என்றுமுன்பிதாமகனிசைத்துளானென
வன்றொருசொற்கணவதனிற்கேட்டுளே
னின்றிவற்கப்பெயரோகமீவதே
நன்றெனவோர்பெருநாகங்கூறிற்றே. (௨௯)

ஆதரவுடன்பணியரசரவ்விடை
மாதவனடிமலர்வணங்கியேத்தியே
பேதையையளித்தனர்பெயர்கொண்மாமுனி
காதலியெனக்கொடுகானினண்ணினான். (௩௰)

சூழலிற்சென்றுதன்றுணைவியாளுடன்
வாழுநாளெனதுசொன்மறுத்தவக்கணந்
தாழுறநினைவிடுத்தகல்வன்றங்கென
வேழையோடுரைத்தினிதிருக்குநாடனில். (௩௧)

அனலியென்றுயிரொலாம்வணங்குமாரியன்
றனியறுமத்தவெற்பதனிற்சார்வுழிப்
புனலிடையருக்கியமளிக்கப்போயினு
ரினிதுடனுறுமறையோரியாருமே. (௩௨)

வாசுகிதங்கையைமணந்தகோமுனி
நேசமாந்துயிலிடைநிகழும்வேலைகண்
டாசறுதேவிவந்தருகுசார்ந்தனள்
பேசிலன்முனிவரன்பின்னென்றெண்ணினாள். (௩௩)

மெய்தருபாற்கரன்வேலைபுழ்குவா
னெய்தினன்மேல்புறத்தெழுந்திலான்முனி
செய்திறன்றெரிகிலனுணர்த்தற்சீறுமோ
பெய்துணர்த்தாவிடிற்பிழையென்றேதுமோ. (௩௪)

எனமனந்தளர்ந்தனளிரவிநீங்கிடிற்
புனிதநாயகன்றவம்பொய்க்கும்போலுமாற்
றனிவுறினும்வினைசூழினும்நல
னெனநினைந்தடிகளையேத்திப்பற்றினாள். (௫௫)

விழித்தனன்மாமுனிவெருவிநிற்றிடு
மொழிக்கிளிவணங்கலுமுனிவுகூர்ந்தனன்
பழிப்பறுகற்பினாய்பயனொன்றின்றியே
விழித்துயின்மாற்றியமாற்றமேதென்றான். (௫௬)

பாற்கரன்மேற்றிசைப்பரவைமூழ்குவான்
றீர்க்கமாயடைந்தனன்றேவநின்னுழை
யேற்பவருக்கியமீயவேகினார்
நாற்றிசைத்தொறுந்தொறுநயந்தபுள்ளினம், (௫௭)

ஆதலாற்றுயிலுணர்த்தாமல்வைகிடின்
மாதவநினக்கினிமறஞ்செனிக்குமென்
றேதமென்றறிகிலேனெழுப்பினேனெனக்
காதலிதனக்கிதுகழறலாயினான். (௫௮)

பேதைநீயுணர்கிலைபெட்பிலென்றுயில்
போதரவுணர்ந்தியான்புனலளித்தலா
லாதவனேகுமோவறிவுசிந்தினாய்
மீதுரைப்படிவனம்விரைந்துசெல்வனால், (௫௯)

என்றுரைத்தந்தணனெழுந்துசேறலு
மன்றவளயர்ந்தவனடியிற்றாழ்ந்தெனக்
கொன்றியகடைப்பிடியுரைத்தியென்னலு
நின்றுளமுருகியேநினைந்துகூறுவான். (௬௰)

வாரணமருப்பெனவளர்செழுந்தனத்
தோரணியல்குலாய்கேட்டிசீரியோன்
காரணமூர்த்தியையனையகாட்சியான்
சீரணிதிருமகனுதரஞ்சேர்ந்துளான், (௬௧

அன்னவனிற்றனையளிப்பனவ்வள
வுன்னுநின்றாயகமுற்றிருத்தியென்
றின்னவான்மறையெலாமெடுத்தியம்பியே
சொன்னநன்முனிதவச்சூழலேகினான். (௪௨)

பாட்டளிதுதைந்தெழுபதுமமாலைசேர்
நீட்டியகருங்குழல்சூழணீங்கியே
பூட்டியதுணைவர்பாற்புகுந்திவ்வாறெலாங்
காட்டியாங்கவனைபாற்கசிந்திருந்தனள். (௪௩)

கருவளர்ந்தொருபெருங்கரும்பினன்மணி
வருமியலெனவொருமைந்தன்றோன்றினான்
றிருவளர்முத்தலந்திகழ்வுளார்க்கெலாம்
பெருமிதமெய்தியபெற்றிபோன்றதே. (௪௪)

வந்தமைந்தனையெடுத்துவந்துமாதுலர்
சிந்தைகள்களிப்புறக்கடன்செலுத்தியே
கந்தனென்றமரர்கண்களிப்பமாமறை
தந்துவுந்தரித்தனர்சமயநோக்கியே. (௪௫)

மாதவர்யாவரும்வந்துகூடியே
வேதனத்திகனெனும்பெயர்விளம்பினா
ரோதினன்மறையெலாமுயர்வில்வைகினான்
மேதினிக்கிளநிலாவிம்பமென்னவே. (௪௬)

அப்பெருங்குமரனலனைசாபமிந்
கிப்புடைதவிருமென்றெண்ணிவைகினார்
செப்பியபணிக்குலவரசர்செம்மனி
யிப்பொழுதம்மகமியற்றவேண்டுமால். (௪௭)

என்னவேயுதங்கனுமிருடிகூறலுஞ்
சொன்னசொற்கேட்டிறைதுணிவிற்கூறுவான்
மன்னுமென்மாட்டொருகுற்றம்வைத்திலார்
தன்னையெவ்வணங்கொலைசமைத்தலென்றனன். (௪௮)

பிழையவர்செய்துள்ளார்மறந்துபேசினு
யிழுக்கனுமனமுடையிறைவனுய்பிதாக்
கழிவிலாவாருயிர்கவர்ந்ததீயர்தம்
பழிதவிராதுநிற்பண்பிற்றாகுமோ. (௪௯)
கேட்டிநீமன்னமுன்கிளர்ந்தநின்பிதா
வீட்டுறுகாதையைவிளம்பக்கேளெனச்
சேட்டிளம்பரிதிபோற்சிவந்தசிந்தூரந்
தீட்டியநுதலினுஞ்செப்பன்மேயினன். (௫௰)

சலற்காரச்சருக்கமுற்றிற்று. ஆகூ ௰. சா௱கூ.

பரிட்சித்துச்சருக்கம்.



குருகுலத்தரசர்கோமான்குனைகழற்காளையொன்னார்
மருமலர்ப்பகத்திற்றூழமறமுடைக்கூர்வைவேலான்
திருவளர்பரிச்சித்தந்தைசெகமெலாம்புரக்குநாளிற் ...
பெருவலித்தானையோடுங்கானகம்பெயர்ந்துசென்றான். (௧)
கரியரிகேழலெண்குகடமைமான்விலங்கின்கூட்ட
மரிபடக்கணைகளோச்சிமுயற்சியாலுலவுங்காலை
வரிநெடுந்தூரமோடமன்னனுந்தொடர்ந்துசென்றான்
கிரிமுழுதுருவியோடிமறைந்ததுகெடாதவேங்கை. (௨)
முயற்சியால்விட்டுநீங்கான்முன்னவனேறும்போதிற்
பயிற்சியான்சமீகனென்னும்பாவனன்றவத்திலவைக
வியற்கையால்வணங்கியேத்தியிவனொருவிருகம்வந்த
தயற்செலக்கண்டதுண்டேலறைகவென்றாசன்கேட்டான் (௩)
உரைத்திடாவிரதங்கொண்டோனுமனத்திருந்தபோதில்
விரைப்புதுமன்றன்மார்பன்வெகுளியாலொருசார்வீழ்ந்த
திரைத்தவியுரகங்கண்டேசிலைமுனைதன்னிலேந்தி
வரைப்புயங்களத்திற்சுற்றிமன்னவனகன்றுபோனான். (௪)

போனவன்விருந்தங்காணான் பொள்ளெனவிரைந்துமீண்டு
தானணிச்சேனையோடுந்தன்பெரும்புரத்தைச்சார்ந்தான்
கானிடையிருந்தகொற்றக்கலைமுனிகாணுறொன்றும்
வானுயர்தவத்தினூற்றான்மாசனமாலையோடும். (௫)

அன்னவனளித்தமைந்தனருந்தவச்சிருங்கியெனும்போன்
பின்னொருரூபுற்றாங்கிப்பிரமனைமனத்துட்கொண்டு
மன்னுநற்றவஞ்செய்வான்பான்மாதவனொருவனெய்தி
யின்னதுபுகன்றான்மைந்தனியம்பருஞ்சீற்றங்கொண்டான். (௬)

தந்தையர்க்கின்னல்செய்ததராபதிநாளோரேழின்
முந்துதக்ககன்வாய்ப்பட்டுமுடிந்திடவெனச்சபித்தே
யந்தணனோடுந்தந்தையருகடைந்தரவைநீக்கி
வந்தனைபுரிந்துசாபம்வழங்கியதனைத்துஞ்சொற்றான். (௭)

அத்தனுந்தனுக்கெல்லேறங்கியலகிலாவுலகங்காக்குஞ்
சத்தியவாய்மைமிக்கதண்மதிக்குலத்துதித்தவேந்தை
வித்தகனெனையுன்றால்வெறுப்பட்டோவோவேட்டப்போந்தோர்
மத்துடையவரினன்றேயாமறைபுணர்ந்திலாயோ. (௮)

பொறையினுமறிவுசார்ந்தபுலமைமெயன்பதினுநேரா
யறையமேவார்மேவந்தருண்டோவையநீயறிவிலாமற்
சிறுமறுவறிவினாலேசெம்மலைச்சபித்தாய்மீட்டு
நிறைவுறுமுலகமேயாங்கிநீதியுமுளதாமென்றான். (௯)

ஆரணமுனிமேயநின்னையவமானமியற்றினானென்
றேரணிமனம்பொருமலிசைந்தனைசாடற்கே
தாரணிதலின்மீட்டென்பாற்றவிர்த்திடுமாறுகூடா
காரணமிருந்தாலன்றிக்கறுக்குமோசிந்தையன்றான். (௰)

அவ்வுரைகேட்டதந்தையடியவர்சிலரைக்கூவி
வெவ்வழற்கதுவுங்காலவேலினான்பக்கமெய்தி
யிவ்வுரையனைத்துமோதியின்றுதொட்டேழுநாளுஞ்
செவ்வையினிருந்துபாந்தள்சேர்ந்துதீண்டாதவண்ணம். (௰௧)

காசறிடவென்றுகூறிக்கசிந்துமீண்டடையவென்னப்
பார்தருபனருகுசார்ந்துபகர்ந்தனர்நடந்தவெல்லாம்
வேத்தவைநடுவண்வைகும்வேந்தனும்வியந்துசூழு
மாத்தவர்குழாத்தினோடும்வயம்பெறவுசாவினானே. (௰௨)

விதிதனைக்கடக்கலாற்றுதென்றுளத்தெண்ணிமீண்டு
மதிவலாருரைத்தவண்ணம்வாரிதிநடுவண்வண்மைப்
பதியொன்றுந்தறியியான்றுசெய்பன்மணிமாடநாப்பண்
டுதிதராவாறுநாளுமிருந்தனன்றேறன்மாதோ. (௰௩)

எழுநாளுநீங்கவந்தெய்தவிணையறுதக்கப்பேர்ப்
பேழைகொள்பாந்தள்வேந்தன்பெருந்தவன்சாபமோர்ந்தே
வாழுமன்னவனைத்தீண்டவல்லினாந்தகும்போது
தாமடைவானளவுநீர்ந்தண்ணிழற்றங்கிநின்றான். (௰௪)

காசிபனென்றோர்வேதன்கலைவலான்வறுமைபூண்டோன்
பேசுமிவ்வுரைகள்கேட்டுப்பெரும்பணிதீண்டிற்றேனு
மாசறவிடத்தைநீக்கிவரும்புகழ்தருமமத்த
நேசமாய்ப்படைப்பனென்றேநிருபன்பால்வருவதானான். (௰௫)

மறையவன்வரவுதன்னைவாசுகிக்கிளவலோர்ந்தே
நிறைவுறவிருத்தவேடநீதிமாமுனிவனேபோ
லுறுதனதுருவந்தாங்கியொருவனையெதிர்ந்துநீயிங்
கிறையுழைவருவதென்னோவியம்புதியெனவுஞ்சொல்வான். (௰௬)

விடங்களையரிக்குமீசன்விளம்புமந்திரங்கற்றுள்ளேன்
படந்திகழ்நாகங்கவ்விப்பார்த்திபனிறப்பதோர்ந்தே
யிடந்தனிலடைந்துநீக்கியிருந்தனங்கொள்வான்செல்வேன்
றடந்தனிலடைந்தேனென்றான்றக்ககன்சாற்றலுற்றான். (௰௭)

ஈசனுங்கொருவனாற்றியெம்முடைவிடந்தீர்ப்பாரார்
வாசுகிக்கிளையோனானமாசுணம்யானேகண்டாய்
வீசிவானளவுயர்ந்தவிருக்கநுண்பொடியதாகப்
பேசியான்றீண்டிவீழ்ப்பன்பெருஞ்சினைவடத்தைமன்னோ. (௰௮)

முன்புபோன்மரனுண்டாக்கிமுயற்சியினிறுவுவாயேல்
வன்புடைநினதுவாய்மைமாசுறுதென்றுகொள்வ
னின்புடையுளதோவிந்தநீர்மைக்குவிடயமென்றான்
பொன்பெறுமுனிவனவ்வாறியற்றுதிபொருந்தியென்றான். (௰௯)

வேதியனுருவநீங்கிவெவ்விடநாகமாகிப்
பாதபந்தன்னைத்தீண்டப்பரந்ததொன்மரஞ்சுருண்டே
மாதவன்முன்னர்நீறாய்மாய்ந்ததுமுனிவனோக்கி
யோதுமந்திரஞ்சஞ்சீவித்துயர்மரமுன்போற்செய்தான். (௨௰)

இலைதளிர்கனிகாய்முன்போலிடருறவெழுந்துநிற்பக்
கலைமுனிதன்னைவியந்துகடியமாசுணமொன்றோது
நிலையுளாய்நின்னாலாகாநெறியிலையெனினும்வேதா
தலைமிசைபொறித்ததார்க்குந்தவறுமோமாதவத்தின்மிக்கோய். (௨௧)

முனிவரனிட்டசாபமொழிபழுதெய்தில்வேத
மினியொருநெறியுஞ்சீருமியம்புதற்கதாமோ
குனிசிரத்தவனுய்மீடல்குரவர்கட்குயர்வதன்றோ
வினியுனதிருக்கைசேறியிறையிறந்திடுதறிண்ணம். (௨௨)

ஆதலானுனக்குவேண்டுமரும்பொருடருவன்மீண்டு
போதுதிவேதவென்றேபுகுந்தபன்னகங்கூறக்
காதலாலிசைந்துமீண்டுகனகங்கொண்டவனூர்புக்கான்
பாதபநிழனீர்த்தாழிபரந்ததுபார்ந்தன்மன்னோ. (௨௩)

அப்பெருந்தருவின்மீதினந்தணரடைகொய்துற்றோர்
செப்பரும்விடத்தான்மாய்ந்துசெழும்பொடியானார்மீள
முப்புரிநூலான்றன்னான்முன்புபோற்றோன்றிமீண்டு
செப்பினாருலகினென்றேதிருமுனிபின்னுஞ்சொல்வான். (௨௪)

(வேறு.)

வந்தகொடியவிடநாகமறையோனுருவாய்ச்சம்பிரத்
தத்தகனிபொன்றினைத்தாங்கித்தளத்தினரசற்களித்திடலு

மிந்தவிரகையுணராமலிறைவனேந்திமோந்திடலான்
முந்தைப்படிவம்புனைந்தவன்றன்முகத்திற்றீண்டி மறைந்ததுவே.
தீங்குமரவந்தீண்டுதலானிருபனயர்ந்திவ்வுலகனைத்தும்
பாங்கினலறவுயிர்துறந்துபரமபதத்திற்குடியானான்
ஈங்குதுயரால்மைச்சர்குழாம்விளங்குகடன்கண்முடித்தபின[றான்
ராங்குன்றனையேயிறையெனக்கொண்டமர்ந்தார் நடந்ததிதுவென்
சொற்றமுறையாற் றக்கன்செய் துன்பமுணர்ந்தாய வங்கிளைஞர்
முற்றவவனோடுடன்மடியமுடித்திமகத்தைவிரைந்தென்றே
கற்றமுனிவனெடுத்திசைப்பக்கறுத்தபணியின்குலமுழுது [ருன்.
மிற்றுத்தணலிற் பொடிபடுப்பா னிருந்தோர்வாய்மை யிசைக்கின்

பரிடசித்துச்சருக்கமுற்றிற்று. ஆக கவி. ௬௱௯௰௫.

சர்ப்பயாகச்சருக்கம்

புயங்கவாணர்குலமுழுதும்புனிதமகத்திற்பொடியாக
வியந்துபுரியுந்தனிவேள்விவிதிகளனைத்தும்விளம்புமென
வயங்கொளரசன்மறையோரைவணங்கிக்கேட்பமற்றவரு
மியங்கும்விதிகளுள்ளவெலாமிறைவற்கெடுத்துப்புகன்றனரே. (௧)
அவ்வாறிருந்துமகம்பயில்வானரியவபுட்டையெனுமானாள்
செவ்வேல்விழியாளுடன்விரததீக்கைகுறித்துச்சிறந்ததனி
மைவார்கடல்போன்மகச்சாலைமணியாலமைத்தாங்குறுகலப்பை
வெவ்வேறமைத்துமாமறையோர்வேலைசூழமகந்தொடுத்தான். (௨)
வைசம்பாயர்சயமுனிவர்மறுவில்பரதர்வசிட்டரொடு
மெய்செய்வாதராயணராம்வேதமுனியைமுதலானோர்
செய்சவிருத்திவிசாசதராய்ச்செப்புங்குரவரெனக்கொண்டே
பெய்சமிதையோடிழுதுகுத்துப்பெருகுங்கனலைவளர்த்தானே. (௩)
மறையோர்பலர்மாமறைகூறமண்ணிற்றிரியுமரவெல்லா
மிறையோன்வளர்க்கும்பெருங்கனலினெய்திவீழ்ந்துமடிந்தனவாற்

குறையொன்றில்லாக்கத்துருவைகுமரர்வழிபிறந்தனித்தெழுந்த
முறைகொளரவினினங்களெல்லாமழிந்திறந்துமடிந்தனவே.
கடைந்தவடிவேற்புரைகண்ணாள்கமழ்கத்துருவைதருமரவின்
மிடைந்தகொடியநெறிநாகவீரராருமாய்ந்தவிரதா
ரடைந்துபோற்றுந்திறல்வல்லோரனந்தஞ்சேடன்வாசுகிநல்
விடஞ்சேர்தக்கனைமுதலாமிருநான்குரகமிருந்தனவே. (ரு)
அன்னவரையுமருமறைசென்றழைக்கும்போதுமனமேலி
யுன்னும்பாந்தடக்கைகளுங்கொருவனிமையோரிறைபாற்போய்
மின்னுங்கதிர்மாமணிமுடியோய்வேந்தன்புரியும்வேள்வியிறுத்
சின்னமுறுதவகைகாத்துச்செய்வேளாண்மையெனப்பணிந்தார்.
உருகியிமையோர்பெருமானுமுயிரோவெனினுந்தாரணடைந்தோ
கருணுமாறுமறைநெறியேயாமென்றடயமளித்தெடுத்து [ர்கி
வெருவலரசன்வேள்வியிறுவினியாவண்ணநினைக்காப்பன்
பொருவிலாதோய்வைகவெனப்புகன்றனவனுமிருந்தானே. (எ)
இரண்டாயிரம்யோசனைபுயர்ந்தவெழில்மந்தரத்தையடிதொடங்கி
யிரண்டாயிரஞ்சுற்றுறச்சூழ்ந்தேயிமையோரசுரர்குலத்துள்ளோ
ரிரண்டாயிருபாற்பிடித்தீர்க்கவெழில்சேர்தலையுமுனிவானு
மிரண்டாய்வளர்ந்தேயமுதீந்தோனிதனைநோக்கிச்சிந்தித்தான்.
தாயானவண்முன்றணிந்துலாத்தசாபக்கனலும்வினைக்காற்றுந்
தேயாத்தவத்தினரசனுடைச்சீற்றவிழுதுந்திறன்முனிவன், றேயா
ப்பகையாஞ்சமிதைகளுந்தொடர்ந்தோர்மகமாய்வளர்ந்தெழுந்தா
ன்,மாயாதுரகங்களினெவரோவாழ்வாரென்றேமனநொந்தான். (அ)
என்னேயிதனுக்கினிச்செய்கையெனவேநினைந்துதம்பியிளைஞன்
முன்னுளுணாத்தசொன்னினைந்துமுதலீன்றவடன்னிடங்குறுகி
யன்னையிதற்கேதுணையென்னவவளும்வெதும்பிவிழிகலுழ்ந்தாள்
பின்னையுதித்தசலற்காணாபெருகுதுயரோடெதிர்நின்றாள். (௯)
வருந்தேலம்மநீயென்றேமடவாள்கலுழ்தனைமாற்றி
யிருந்தேயினையாடனக்கொல்லையிலைசப்பானுனதுதிருமைந்தன்

பெருந்தேனிறைக்கும்வரைநாடன்பிறழுங்கொடியமகத்தெல்லை.
திருந்தாமரைப்பூவடிநோவச்சென்றுற்றிருந்துயவொன்றான். (௰௧)

விரைந்துபோந்துமகனேநீண்டுதுணைவனிருந்தேங்கு
மாந்தைதமிகுமாளிகையடைந்தாளருமாதுலனுமவ்வளவிற்
சுரந்தவருணன்மருகனுக்குத்தொடர்ந்தசெயலின்முறையெல்லாங்
கரைந்தேதெரியவுரைத்தெம்மைக்காத்தியெனலுங்கசிந்தானே.

மூந்தக்கனலின்மடிந்தகணற்றுதல்வரன்றிமேலாக
விந்தப்புவியினினிமுதலாயிருந்தோர்க்கிடரொன்றெய்தாமற்
சிந்திக்கரியகுருகுலஞ்செனமேசெயன்பாற்சென்றிரந்தே
யந்தத்துயரமகற்றேம்வலத்தன்றவமும்பொருளாமோ. (௰௩)

அஞ்சலிநமியெனக்கூறியருமாதவமொண்ணிலர்சூழ
முஞ்சிகாவிமரவுரிசீர்முந்நூலசையச்சடைதுளங்க
விஞ்சுதண்டகமண்டலமும்விளங்குங்குரவரிருபாலு
மெஞ்சியடரமறைமொழியுமெழிலியனையான்விரைந்தானே. (௰௪)

வாசமலரினறுந்தொடையல்வரைமார்புடையமன்னவனூர்
தேசினியற்றும்பெருவேள்விசேர்ந்தான்றிறலத்திகனெனபோன்
வீசுபுகழ்மாதவர்தமக்குவிரைந்துவணங்கிவேந்தனுக்கே
யாசிபுகன்றங்கவன்பூசையதுகொண்டொன்றையறைவானால். (௰௫)

மறத்திற்புகழிற்றோள்வலியில்வாய்மைநிலையிற்றயாவதனி
லறத்தின்மகத்திற்றனத்திலரசினியலினருந்திருவிற்
சிறக்கும்வனப்பிற்பொறைசார்ந்தசெம்மைமுதலாந்திறங்கடனிற்
குறிக்குநிகரில்பெரியோய்நின்குலத்தோர்தவமேதவமாமால். (௰௬)

தந்தைதனக்குப்பிழையிழைத்ததறுகணரவொன்றினுக்காக
விந்தவுலகினரவனைத்துமெரியிற்கரியாய்விழச்செய்தாய்
சிந்தைகலங்கிச்சேடன்முதற்சிறந்தபெரியோர்திகைத்தயர்ந்தார்
முந்துனுளத்தின்படிமுடித்துமுடியாப்புகழ்கைக்கொண்டாயே.

தக்கபுகழ்சேர்பிதாமகனுந்தவஞ்சேர்கிரீடிசயித்தவனை [ட்டான்
பொக்கலுடன்சூழ்ந்துயிருண்பானுரைத்தோர்விரகான்முடித்தி

மிக்கமருமானியவனில்விளங்கும்புகழ்கொண்டுரைத்தபடி
யிக்கோதலத்திற்செலுத்தினையாலிணையோவிசயனினியுனக்கே.

மாலேவந்தோருருவானமறைவல்வியாதமாமுனிநின்
பாலேயிருந்துமகன்மான்றயிற்றினிசையாதுவைதாமோ
வேலேயிலங்குகரதலத்தாய்வேதமுனிவனோனையர்சொல்
லாலேயழியுமீட்டெய்துமருள்சேருலகமொருமூன்றும். (௰௯)

அத்தன்மையராமகமியற்றுமரியவரசர்கருத்தமானி [மோயா
லித்தன்மையமேவா வெதுமுடியா திதுவோர்பொருளாக் கருதினை
முத்தன்மையருமிவணெய்தமுடிப்பதரிதோமூவுலகுப்
வைத்தபிரமன்வாய்க்கடங்காவரம்பில்சீர்த்திபொருந்தினையே.(௨௰)

ஆனபோதேயினிநீயாட்டியாரேனுங்கருமம்பெறவேண்டி
ஞானமுனிவருடனின்பானடந்தேனென்றனதுங்கட்டு
மானவணியானுடனொடுங்கிமற்றேன்றேசும்போதிவுந்
தானஞ்சூனாத்தநலனுனையுந்தன்னையுருக்கப்பணிந்துரைப்பான்.

தவத்தரரசேநீயெனதுதனிநல்லுயிரைவிரும்பிடினு
முவப்பிலெளிப்பனின்வாய்மைக்கொவ்வாதவருமுளர்கொல்லோ
நிவப்பிலுனைக்கவெனப்பணித்தநிருபன்றனக்குநெடுந்தாரஞ்
சிவக்கநடந்தபதத்துணையான்றிருவாய்மலர்ந்தேமொழிகின்றான்.

(வேறு.) தொல்லைவாளரவெலாந்தொலைந்துதீர்ந்ததா
லொல்லையிலிருந்தவர்க்குயிரையீவதே
சொல்லுமெய்வரமெனத்தொலைவிலாவொளா
மெல்லைதீர்புகழிலுயீதல்வேண்டுமால். (௨௧)

என்றிருகரங்கள்கொண்டிரந்துவேண்டலுங்
குன்றுறழ்புயத்தினன்குழுவதாகிய
வென்றிவேதியர்தமைவியந்துநோக்கினு
னனைவரெனவிசைந்தவர்நவிறன்மேயினார். (௨௨)

மூவரும்புகழ்ந்திடுமுதன்மைவிஞ்சினேன்
றூவருந்தவச்சலற்காரன்றந்தவன்

றேவரும்புகழுமத்திரிகனென்றோதிய
பாவகனைவன்மொழிபழுதுண்டாகுமோ. (௨௫)

சொன்னசொன்மறுக்கிலையையதூயவன்
மன்னுறநிற்பால்வரமாதவங்களீ
முன்னைமெய்செய்தனைமுனிமொழிப்படி
தன்னிகாருமகத்தவிர்த்துமெய்யுற்றனர். (௨௬)

ஆங்கவொண்ணுமுமரியமாமுனி
பாங்குடைச்சிந்தையிற்பரிவுநோக்கியே
நீங்கினேன்மகமெனநிருபனோதினான்
தீங்கறுமுனிவரன்செருக்குற்றானரோ. (௨௭)

முன்னெறிற்றூயவர்மூழ்குந்தீயிடைப்
பன்னரும்புழுக்குத்தெறித்துப்பற்பலர்
சொன்னமந்திரங்கடக்கக்கனைச்சூழ்ந்ததா
லன்னவன்வெருவிநாவுலர்ந்தமுங்கியே. (௨௮)

அச்சமோடவனமோசரண்ணறன்
பச்சைமாமணித்தவிசனைப்பற்றலு
மிச்சைநீத்தவர்களிவ்வியற்கையுன்னியே
பொச்சமேதாமறையெனச்சீற்றம்பொங்கியே. (௨௯)

வலிமையுமகந்தையுமாற்றியீர்க்கவென்
றலகறுமறைகளையறையுமெல்லையி
னலனுறுதவிசையுநாகந்தன்னையு
மிலகுமிந்திரனையுமீர்த்துவந்ததே. (௩௰)

வாசவனடைசுழன்றெதிர்வந்துநிற்றலு
ஞானமாமுனிவரர்நலிதல்வண்டிலர்
வானமீதவர்தமைவைகுமாறுசெய்
தேனையவிதிகளிலிருக்குமொல்லையில். (௩௧)

அத்திகனருளினலரசன்மாமகம்
பத்தியாய்விடுத்தலும்பயந்துறந்தவன்

சித்திரத்தவிசொடுந்தெச்சகப்பெயர்
குத்திரனொருபுருகூதன்போயினான். (௫௨)

அரசனும்பூரணாகுதியுமேனைய
விரைசெறிவிரிசனுமேடுக்குவேதியர்க்
கிரசதங்கனகமும்பிறங்கநல்கிநல்
வரிசையிற்றிகழ்தனல்வழங்கலைவகிறான். (௫௩)

மன்னனையாக்கியேமாதவத்தினாற்
றன்னிகரற்றவர்தனையுரைக்கவன்
முன்னுறாத்தவிசிடையிருத்துமைத்துனர்
பொன்விராத்திகழ்புகழலாயினான். (௫௪)

(மேலுமாமாண்பெற்றகாதலைத்தோல்புரிநால்பெற்றான்மாகதம்போ
விரம்பெற்றான்சயனம்பெற்ற, னான்பெற்றவர்மகவானுயிரோ
பெற்றா னுயர்ந்தசதுமுகத்திறைவாக் குயர்ச்சிபெற்றான், யான்பெ
ற்றோரமுதவிக்குந் தாப்பு பெற்றார் யானெபெற்றோர்தங் கருக்காதா
ரம்பெற்றார், யான்பெற்றவரபொன்றே யனைக்கும்நீந்த விறைவ
நீ பெற்றபுகழார்பெற்றாரோ. (௫௫)

(வேறு.) என்னவாய்மொழிகளாலிறைமகிழ்ந்திவன்
பொன்னடிதொழத்தொழப்புனிதன்மீண்டுபோய்
மன்னுமாதுலருடைவருத்தநீக்கித்தன்
றன்னருமருந்தவச்சூழலசார்ந்தனன். (௫௬)

ஆதலாலன்றுதொட்டத்திகன்பெய
ரோதினுமாசுமுற்றவரைத்தீண்டுறா
தீதலால்வெவ்விடமேறிற்றென்னினு
மீதுவன்பெயர்சொலமீண்டுநீங்குமே. (௫௭)

வாசுகியாதியோர்மகிழ்ந்துவைகினார்
பேசருமவர்கிளைபெருகிப்பின்னரு
மாசறநீடியதகப்பின்மன்னனு
மோசைசேரவைப்புறத்திருக்குமெல்லையில். (௫௮)

சர்ப்பயாகச்சருக்கமுற்றிற்று. ஆகவி. ... ௭௰௧.

சிறப்புப்பாயிரச்சருக்கம்.

அந்தணர்களாதுலர்களாருமகிழ்வெய்த
முந்தநெறிமன்னன்முறையாலினியபூசை
தந்தவர்விரும்பியதனங்கணனியீந்தே
வந்தனைபுரிந்தருள்வழங்கினன்விடுத்தான். (௧)

யாவருமகன்றபின்னரின்னல்கெடவந்த
பாவலர்கள்சூழவுயர்பார்த்திபனிருந்தே
தேவர்முனிமேவார்களொடுதென்புலவரின்ப
மேவுகடனாற்றியவவ்வீறுபெறுநாளில். (௨)

நேயமுளசீடரொடுநீதிவலவாத
ராயணனடைந்திடவிராசனெதிர்கொண்டே
தூயவனடித்துணைதுதித்துறவணங்கி
மேயகடனீந்துதவிசின்புடையிருத்தி. (௩)

வந்தமறைமன்னனையும்வந்தனைபுரிந்தே
முந்துதவிசீந்தவர்முயற்சியருள்கைக்கொண்
டத்தனிருந்தபினராரணமுனைத்த
சுத்தரமுனிக்கிவைதொடுத்துறைவதானான். (௪)

பாண்டவர்களும்புகழ்சுயோதனர்களும்பண்
டாண்டபுவியிற்கிளைஞராருமடிவெய்த
மூண்டமர்செய்தார்முடிவுமற்றுமுணர்வோய்நீ
வேண்டிலைவிலக்கிலைவிரும்பினையரும்போர். (௫)

தின்றனதுசிந்தைதனினேயமிலதாகி
வன்றிறல்கொண்மைந்தர்கண்மடிந்திடவுணர்ந்து
மொன்றுமுனையாதவகையுற்றனைவிலக்கிற்
சென்றுமுடிவாரிலரிருத்தரசுசெய்வார். (௬)

வித்தகர்திலத்தினைவிரும்பியவர்மாறும்
மத்தரின்மயங்கிவசைவந்திடவெதிர்த்தார்

முத்தனினி நீபுமொழியா துரைதனென்றோ
வத்தனையு நிமைநினதா பெருமைவெறுத்தான். (எ)

ஐயனுநகைத்தொருவர் தம்மனறிவுகொண்டே
மெய்யவினை விண்டவர்கள் மெய்ந்நெறியிலுண்டோ
மையலற வென்றருவர் வந்துரைசெய்தாலு
முய்யுநெறியின்றியவருட் குவாகொண்மைந்தா. (அ)

விரும்பியதுமேவுதலுமேவுதல்விலக்கிற்
றிரும்பியதுமில்லையினியேதுநீயெனமேவாதச்
சுரும்பிமிர்நறுந்தொடையலாய்திருமார்பன்
பெரும்பயனடைந்தமுனிதன்மொழிதுபேசும். (கூ)

அன்னதவர்முன்னர்வினையாமியல்களெல்லா
மின்னமெவனயானுரையவினையவருள்செய்யென்ன
மன்னனுமுனியதைமாமுனியறிந்தே
தன்னினியசீடனொருசாற்றெனமொழிந்தான். (௰)

(வேறு.) நன்பொருவேதநான்குடனைந்தாய்நவில்காதை
பண்பொருவைசம்பாயனரின்னேபகர்கின்றார்
திண்புயமக்குற்கேளெனவோதத்திருமாலெண்
றெண்டிசைராசூழலடைந்தாவியம்லோடும். (௰க)

வேர்கநுனும்வைசம்பாயனர்தன்னைவியந்தேத்திச்
சேர்ந்தவமோரம்பாண்டவர்காதைச்செயலெல்லா
மாய்ந்தவமுற்றுக்கேட்டனன்முன்னுளாமென்றே
போந்துளவேதசூதர்புகன்றார்பொருவில்லார். (௰உ)

(வேறு.) அன்னவான்கதையை நமக்கியாம்புகல்வனரசனுக் கருண்
முனிமெயுரைத்துச், சொன்னசொற்படியென்றோதலுமிருந்த தூயவர்
தமதுளமகிழ்ந்தே, மன்னியசூத முனிவனைப்போற்றி வகுத்திமெ
ன்றறம்பிறைற்கேட்ப, நன்னலந்திகழு மாதவர்தமக்கு நவின்றிடத்
திருமுனிமெயுரைத்தான். (௰ங)

ஆரணமுனிவனைத் தவிசிடையிருத்தி யரசனு முறைமையருஞ் சுசி
யிற், சீரணியாடைபுனைந்து கைகுவித்துத்தெய்வதம் போற்றியோ
ர்மனதாய்ப், பூரணமுலையாள்வடபுட்டையோடிருந்து புரவலன்வின
வுமந்தக், காரணங்கடந்தோன் திருவடி நினைந்து கலைமுனிபகர்
ந்திடலானான். (௰௪)

(வேறு.) மறையுணர்ந்தோர் மறையென்னவுபநிடத்தோ ருபநிட
தத்தின் வழக்கமென்ன,வறைதருமநூலாய்ந்தோர்தருமசாத்திர மெ
ன்னவவனிமீதில், நிறையுறுகாமம்பயின்றோர் மதனசாத்திர மென்
னநீதி யானமிக்கோர், துறைபடுவேதாந்தமெனத் தொகுத்தெடு
த்தாரிதிகாசஞ் சொற்றான் ஞானியான். (௰௫)

படித்தவர்கள் பவந்தொலைக்கும் பன்னினவர் முத்திபெறப்படிய
தாகும், வடித்திதனை யுன்னினவர் கேட்டவர்தம் மிருவினையாம்வ
லைமயசாடுங், கடிக்கமழ்த்தார் வேந்தருக்குமனுநீதி நூலாகிக்கவ
லைதீர்க்கும், படித்துரிய வறிவெல்லாந் தருமைந்தா பாரதமென்
றறிவையன்றே. (௰௬)

அக்கதைதனிலிருக்கு மியலெல்லாநீயறியவறைவன் கேண்
மோ, மிக்காரும்பருவங்கள் பதினெட்டாய்க் கதையனந்தம் விள
ம்பட்டுறுந், நக்கோர்கள் பொரும்போரும்பதினெட்டாய்ப் பொ
ருதழிந்த தானைதானு, மக்குரோணி யுடைத்தொகையும் பதினெட்
டாய் விளங்குறுமென் றறிதிமிக்கோய். (௰௭)

ஆதிசபையாரணியம்விராடமுத்தியோகம்வீடுமந்துரோண
ந்தகருமன்மன்னுஞ்சல்லியஞ்சுமுத்திசீர்சாந்திநெறிகொள்பர்வ
ம்மாதுமனுசாசநிகம்பரிமேதமாசிரமமுசலந்தாமே [னே:
மேயதறுவிர்மகப்பிரத்தானிகஞ்சொற்காரோகணத்தோடரோன்பா

ஆதிபஞ்சகமைந்துமுயித்தியபஞ்சகமைந்துமருளாற்சாந்தி [றுங்
கீயாதுபஞ்சகமைந்துமுணர்வருஞ்சொற்கத்திரிய முறைத்த மூன்
னாதலின்றே இனமென்றேகருதியுரைப்பவருமுளர்கமழ்சுலோகந்
தீதறவோரிலக்கமதாச்செப்பினன்சுருதியெலாஞ்செப்பினானே.

இத்தகையபெருங்கதையி னீரொன்பதெனுஞ்சமரி னியலேலதெ
ல்லிற், பத்துடைநாட்காங்கே யனைந்துபகலாசரியன் பகிரண்டு
சுத்தத்தினமிரவிசுதன்மேற்றிறியவுசசியினையுந்தொலைவிலாற்றன்
மதுரபூபதிதனையுமசுவயாதனஞ்சேனைபதியாய்வயங்கினனே. (௨௰)

அக்குரோணியினலகுதேரொன்றுகரியொன்றச்சுவங்கணமூன்று
பதாதிகளைந்தும்பவியெலாருபத்தியிந்நவிதமூன்றுமேந்
றொகையசேனைமுகமாமத்தொகை மூன்றிரட்டிமுந்தொகைமூ
ன்றாகிற், புகருயருங்கணமவைதா மூனறாகிலவாகினியாப்புகல்வர்
மன்னே. (௨௧)

வாகினிகளொருமூன்று புலுதமதாமப் புலுதவகை மூன்றாகி
லோகைதருஞ் சமூவவ்வப ரசசமூவோமூன்றாகி லுயாசமாகி
யருஞ், சோகநுசமாகவியமோர் பததாமேலக்குரோணித் தொகைய
தாமானெ, மாகர்புகழ் நறுந்தெரியல் மணிமாபோயி தன்றொகை
யுமவகுப்பன்கேட்டி. (௨௨)

இருபத்தோ ராயிரத்தெண் ணூற்றெழுபதியற் றேர்களியானை
யஃதே, பொருவற்றபரி யறுபத்தையா யிரத்தறுநூற்றொருபான்
போர்செய், திருமிகவோ ரிலக்கமுட னொன்பதினா யிரத்துமுந்
நூற்றைம்பானச்சேர, திருமித்த வகைநான்கு மக்குரோணி யென்
றொருபேர் நிகழுமன்றே. (௨௩)

இவ்வகையா மக்குரோணி பதினென்று மேழுமெதிர்ந் திகலி
ன்மாளச், செவ்வியுறு நற்குணராஞ்செழுந்தருமன் முதலானோர்
செகங்கைக் கொண்டார், வெவ்வழலசேர் கதிர்வேலாயறமுருவமெ
டுத்ததொத்த மேலோனுண, தெய்வமுனி யிடைவிலக்கிற் றிருமோ
விதிச்செயல்கடெளிவிம்மிக்கோய். (௨௪)

அமலமுனிவாதராயணர்புவியிலானதுவுமமரரோடுஞ்
சமரமிகுமிராக்கதருந்தரணிதனிலுதித்ததுவுந்தயங்குசோம
னிமலமுறுதிருமரபினிருமரபினியற்கைகளுநெறியான்மிக்க
கமலமுகச்சந்தனுவாங்காவலன்வானதியுடனேகலந்தவாறும். (௨௫

வீறுடும்வீடுமனைப்பயந்ததுஞ்சத்தியவதியைப்பீட்டுந்தோய்ந்து
மாறுபெயர்யலலமைந்தராருவரைதகந்துமல்லனவ்வானிற் [த்
பேறுகியடைந்ததுவும்பின்னோனொரிறந்ததுவும்பெயர்ந்துநோக்கி
தேறுதிமாமுனிவனருந்தருமசந்தானஞ்செய்தவாறும். (உசு)

திரிதராட்டிரனேறுபாண்டுவிநலவிதுரனுமாசசெனித்தவாறும்
பிரிதராதகும்பியாகண்முன்னவற்கேகமுடிசூட்டிப்பெருலைஞால
மிரிதராப்படிகாததபாண்டுவிறலுக்கைவர்சுதரொய்துமாறும்
புரிதராபதிசுனகருட்டுகலவொருநாற்றுவர்கள்புகுந்தவாறும்.

அக்காலங்காட்டகத்திற் பாண்டுவிறந்திடவைவரரியதாதை, மிக்
காணு ரடைந்ததுவும் வேந்தனுந்தன் னுளமகிழ்ந்து மேயவெருவர்
றின்றி, யெக்காலு முள மொன்று யிருந்திறத்துமைந்தனையுமினிதுற்
போற்றித், தக்கோர்கள்புகழ்கிலையாசாரியன்பால்விற்கலைச யெலாந்
தணித்தவாறும். (உஅ)

சென்றுருகுருதக்கணைக்குத்திறல்விசயனருந்துருபதேயன்றன்னை
வென்றதுவுநூற்றுவர்க்கும்வேந்தானேனுன்கன்னனுடன் வியந்து ந
ண்பாய்; நன்றிகெடவீமனையே நலிந்திடவாம்புகுத்ததுவுநலையி
லாம, லொன்றினுமாங் கவனுய்ந்ததுணர்ந்திவன்மேவறுரு விரகை
யுன்னுமாறும். (உகூ)

வாரணவாசியினரக்காம்மாளிகைசெய் திவரிருந்து வாழ்கவெ
ன்றே, தாரணியும் புயவேந்தன் றனைக்கொண்டுபுகலவித்துத்தனது
நண்பன், சீரணியுமொருவனைச்செந் தீயிடவென் றேவுதலுந்தெ
ய்தபோது, காரணமங் கிலாமையினுற் கடந்தைவர் தாயுடன் கான
கஞ்செல்வாறும். (ஙய)

கடிம்பவன குமரனெதிர் கலந்தார்க்கும் வலிநிருதர் காவலாள
னிடும்பனைவென் றதுவுமவ னிளையவளா மிடிம்பிமண மிசைந்தோ
ர்மைந்தன், றொடுங்கழலான் றனையளித்துப் பூசுரனேர்லைவ கியது
ந்தொலைவிலாற்ற, லடிமபகனைவென்றதுவு மங்காரபரணனை வென்
றகன்றவாறும். (ஙக)

பாஞ்சாலன்பதியடைந்து பன்றியுடன் மீன்றுணியப்பகழிகோ த்து; நீஞ்சாநற்கடலனைய நிருபரொதிர்துரோபதையை நெறியாலை வர், தாஞ்சார்பிற்றிருமணஞ்செய்தவனூரிலோர்வருடந்தங்குமாறு, மாஞ்சேதலெனவஞ்சியரசனழைத்தருத்தமராசளித்தவாறும். (௩௨)

இந்திரப்பிரத்தந்தனிலே யிருந்தைவரரசுரிமையியற்றுமாறு, முந்துதனஞ் சயன்றீர்த்த யாத்திரைபோய் மூவர்மணமுடித்தவா று, மைந்தரொருமூவரவர்வயினளித்த வாறுமகபதிபூங்காவைச், செந்தழலுக் கிரையாக்கிச் சிலையிரதமுத லளிப்பத்திகழ்ந்த வாறும். (௩௩)

அன்னவமையந்தனிலே மயனளித்தபேரவையொ ன்றமைந்த வாறு, மன்னுசராசந்தன்வதை யானபினர்மகமொன்று வகுத்தவா றுந்; துன்னுசுயோதனன்றனக்குத்துரோபதையாலவமானந்தோ ன்றுமாறும், பன்னரியசூதிழைத்துப்பாண்டவர்நாடனைத்துமவன் பறித்தவாறும். (௩௪)

மாதுதனைத்துகிலுரிந்துவனவாசமீராறுவருடமென்று மோதுமொருவருடமக்கியாத மெனவும்புகன்றேயோட்டுமாறுஞ் சோதருவேற்கண்ணுனைவரும்போய்க்கடுங்கானிற்குடியாமாறு மீதுறுகிம்மீரவதைவீமன்முடித்ததுமேனைவிதங்கள்யாவும். (௩௫)

முக்குணந்தீர் முனிமொழியான் [illegible]ர்முதல்வனைப் போற்றிமு னைகொள்வாளி, பற்குனன்பெற்றதுமமருல கடைந்தேய சுரகு லப்பரவையெல்லா, மொக்கவொருகணைபோக்கி மடித்ததுவுமீண் டிவர்பாலுற்றவாறு, மிக்கதாயுதனியக்கர் மாநகர்போய்மலர்வாங் கிமீண்டவாறும். (௩௬)

மாசுணமங்கருஞ் சாபமகன்றதுவுங் கொடுங்கோலான் வனத்தி னெய்தத், தேசுறுகந்திருவரிறை சித்திரசேனன்வளைத்து செருச் செய்வாறும், பேசரியபோராற்ற லொடுங்கியவன்கைப்புகுந்த பெ

கேட்டு, வீசுபுகழ்பாண்டுசுதர் மீட்டதுவுமவனூரின் மேவுமாறும். (௩௭)

நயந்திகழும்பாஞ்சாலன்றருமடந்தைதனைநோக்கிநயந்துதீயச், சயிந்தவன்வந் தெடுத்ததுவுஞ் சார்ந்தவனைப்பொருதழித்துத்தகைமைமிக்க, வயந்தருமாதினை மீட்டவாறுமருண்மார்க்கண்டர் வந்து முன்னர், வியந்தபல கதைக ளெல்லாம் வேந்தனுக்கு மனமுருக விளம்புமாறும். (௩௮)

மகமொன்றுபுரிந்திறைவன் மனங்களித்துவாழ்வனவு மற்றுந்தீயோ,னகமொன்றுதருவாதமாமுனியை யிவர்பக்கலாககுமாறுஞ், சுகமொன்று கனிபொருந்தவவரவர்தமனத்தியற்கைசொற்றவாறு, நகமொன்றுபெரும்பூதநலியாம லுய்ந்தைவர்நயந்தவாறும். (௩௯)

ஈராறுவருடமுஞ் சென்றொருவருடம் விராடபுரத்திருந்த வாறு மாராதமல்லனொடுங்கீசகனைத் திறலவீமனட்டவாறும், பாராளுஞ் சுயோதனன்வந்தருநிரைகள் கொண்டதுவும்பாண்டுமைந்தர், நேராகிமீட்டதுவுமபிமனுக்குத்தலையைமணநேர்ந்தவாறும். (௪௰)

புரசையுறுகளியானைப்புரவலனை வருமேவப்புரத்தினேகி, வரிசைபெறுமுலூகமுனிமன்னனுடன்றூதுரைத்துவந்தவாறு, மரசனிவர்பாற்சிறிதுவிரகுரைகள்புகன்றருஞ்சஞ்சயனையேவ,முரசுயர்த்தோன்மறுத்துரைத்துமுகுந்தனையேதூதாகமுயன்றவாறும். (௪௧)

அரவுயர்த்தோனுடன்றிருமா லமர்க்கிசைவுற்றமரரிறையவனுற்கன்னன், றிரமிகுத்தகவசமொடு குண்டலமுந்துறக்கும்வகை செய்துருந்தி, வரமிக்கபெருங்கருமமன்னவனுங் கன்னன்மகிழ்ந்தளிக்குமாறுஞ், சுரர்துதிக்கும்விதுரனைவிற்றுணித்திடவும்புரிந்தடைந்தேசொற்றவாறும். (௪௨)

கறுத்தமழைவண்ணத்தன் கட்டுரையாற் பொறையைவர் கருத்தொன்றுறாச், செறுத்துலகம் புரப்பலெனத் திசைதோறுந்தமதுதிருமுகங்கடேண்டி, மறுத்தவிரேழக்குரோணிவாகினிசேர்த்ததுமரவின் பதாகைமன்னன், சிறுத்தவர்புன் மதியாலே காதசவக்குரோணிபடைசேர்த்தவாறும். (௪௩)

அரவமடக் கொடிகுமரனைங்கணை வேபு பரவுகளப்பலிதந்து படையெடுத்துப்பெரும்பூசல் பயிலுமாறும் விரவுமொரு பதுநாளில்வீடுமனும் பன்னிரண்டில் விறலான்மிக்க கரிவல்பகதத்தன்மடிந்தபிமனையும்பதின் மூன்றிற்காதுமாறும். ௪௪

சயிந்தவனீரேழதனிலாசரியன்பதினைந்திற்றரணிமைந்தன், புடைந்திகழ்துச்சாதனனும் பதினேழிற்சல்லியன்வண்புகழான் மிக்க, வியந்தசகுனிப்பெயரான்வேந்தனுடன்பதினெட்டில் விளிந்துமாசான்; பயந்தமகன்றனியிரவிலேனையமன்னரைத்தொலையப்படுத்துமாறும். (௪௫)

மறுநாளிலருச்சுனனும் பொருதவன்றன்சிரத்தின்மணி வாங்குமாறு, முறுபரீச்சித் துதித்ததுவுங் கண்ணிழந்தோ னிவையனைத்துமுரைப்பக்கேட்டுக், கறுவுசினக்காந்தாரியுடன்வரப் போய்க்களமதனைக் கண்டவாறு, மறுவறுசீரடலைவர்வந்த வலாவணங்கியுடன்படுத்துமாறும். (௪௬)

தாதைமனப்பெருங்கவலைதனையொழித்துக்கங்கையிடைத்தருமனெய்தி, வேதியர்சொற் படிகடன்கள்விறலுடன்செய் தருள்செறிவீடுமனைத்தாழ்ந்து, சோதிமணிமுடிசூட்டிமீண்டுதமதருங்குலத்திற்றோன்றுந்தூய, மூதறிவோனரசுரிமை முறையுரைப்பக் கேட்டுவந்தேமுயங்குமாறும். (௪௭)

பரிமேதமொன்றளிப்பானினைந்ததுவுந்தம்பிபரிகொணர்ந்தவா
றுந், திரமானபடையரசர்முதலினரெண்ணிறந்தோரைச் செயித்
தவாறுங்,குரவோர்கள்சொற்படியே கோதின்மகமுற்றியதுங்கொ
ண்டன்மேனி, யரிமீளத்துவரைபுக வைவரிருந்தரசுரிமை யாக்கு
மாறும். (௪௮)

வேதமுனி திருவாக்கால்விழிப்புலனில் பெருமானும் விளங்கில்
லாளு, மோதுதவக் கவுந்தியும்போயாசிரமவாசமதா யுறையுமாறு
ம்; பூதலமெலாம்புரந்தயாதவர்தங் குலத்தெவரும் போரின்மாண்
டி தனைகேட்டுயர் விசயன்சென்றுதுவாரகையினிடைசேர்ந்த
வாறும். (௪௯).

பன்மடவார்குலமனைத்தும் பரவையெனக்கொண்டுநரன் பதியி
ற்செல்வான், றன்வலியாலடைந்திடுநாண் மறவரிடைதலைகந்து கொ
ண்டுசோருமாறு;முன்வலிகொண்டருஞ்சமரின்முனை கொடுத்தவில்வ
லையாமுறைமைநோக்கி, மன்குலமா நகரடைந்துமுன்னவற்கிவ்வா
றனைத்தும்வகுத்தவாறும். (௫௰)

மற்றுமிடையுள்முறையுமன்னுகலிவந்ததுவுமன்னரைவர்
குற்றமினியிருக்கிலெனமாதினுடன்புவிதுறந்தேகுமரன்றந்த
சுற்றமுயர்பரிச்சித்திவ்வுலகிறைவனுயிருப்பத்தொலைவிலாத
வெற்றிமுடிபுனைந்திருத்திமாலுரையால்வைகுந்தமேவுமாறும். ௫௧

இன்னபலவுகையனைத்து மறைகளினுமினிதென்றே யெவருமே
த்தச், சொன்னதிரு முறையுனக்குச் சொற்றிடுவனென்றுரைப்பச்
சுடர் செய்மௌலி, மன்னவனுங்கதிசயித்துவாதராயணன் புவியி
ல்வந்தபான்மை, முன்னியப்ப வேண்டுமென முனியகிழ்ந்து முக
நோக்கிமொழிவதானும். (௫௨)

சிறப்புப்பாயிரச்சருக்கமுற்றிற்று. ஆக கவி. ௫௱௨௰௯.

வியாசருற்பவச்சருக்கம்.

நீர்க்கயன்மங்கைமார்கணீள்விழியினையென்றெய்த
வார்க்குடமுலையார்சோதிவாண்முகங்கமலம்பூப்ப
வேர்ப்பலாக்கனியையுண்டுவியன்மந்திமுழவங்கொட்டச்
சீர்கெலாமிடங்கொண்டோங்குந்திருவளர்செந்நாட்ட. (௧)

அன்னநாட்டையாள்வோனருந்திறலரசர்கோமான்
மன்னவர்திறைகணல்கிவணங்கியபதத்தான்வாயின்
முன்னுறமுரசொலிக்குமும்மதக்களிநல்யானை
துன்னியவசுவென்றோதுந்தூயனத்தேயவேந்தன் (௨)

மின்னெனவாள்விதிர்த்தேவந்தர்பல்லோர்கள்சூழ
மன்னுநாற்றானையோடுமன்னவன்வேட்டம்போந்தான்
றுன்னருமுனிவர்வாழுஞ்சூழலொன்றதனைநோக்கி
யென்னிதென்றுணர்வான்சென்றங்கிருந்தமாதவனைக்கண்டான். ௩

மறைகளினொலியும்பூண்டமாசறுதவமுநீதி
நெறிவழாமுறையுநோக்கிநிகரிலையிதற்கென்றெண்ணிக்
குறைவிலாவமைச்சர்தம்பாற்குவலயமீந்துநீத்தே
யிறையருந்தவத்தினுற்றானிருடியரருள்கொண்டாங்கு. (௪)

மாதவம்பலநாள்வைகிமன்னவனியற்றுநாளின்
மீதலப்புரக்கும்வெற்றிவிண்ணவர்பெருமானெய்திச்
சோதிசேர்விமானந்தண்டந்துகளறுகமலமாலை
போதுநற்கனகமேனிப்பொலிவுதந்தொன்றுசொல்வான். (௫)

தவத்தினாற்பெரியைவிண்ணிற்சார்ந்திடமீண்டுமெய்த
நிவப்புறவளித்தேநின்பாலேயத்தானண்புயானே
னவத்துறவுலகமூன்றும்போனண்ணிநீகாவல்பூண்டே
பவத்துயர்தவிர்த்தியிந்தப்பாருளோர்க்கென்றுபோனான். (௬)

ஆயநல்வரங்கள்பெற்றேயரசனும்பதியைநண்ணி
மாயிருமுடிபுனைந்துமனுநெறிவழுவுறும

லையநல்லுலகங்காத்தானிந்திரற்காண்டுதோறு
நேயமாய்விழாநடத்திநியமலுயிருந்துவாழ்ந்தான். (எ)

மகபதிகனக்குமன்னன்வருவிழாநடத்தலாலே
யகமதிற்குறைவிலாதாயருண்டமழைதிங்கடோறு
மாகிலினமகவவாழ்வுமயற்சியாற்பெருகமைந்தர்
செகமுளாரெவர்க்குமுண்டாய்ச்சிறப்புற்றவெங்குமன்றே. (அ)

அன்னவன்றனைநோக்கியகலிடத்தரசரெல்லா
மன்னுவவாசவற்காண்டாண்டுமகிழ்விழாநடத்தலானார்
சொன்னதீர்க்காயுச்செல்வந்துலங்கியவிளைவுமாரி
நன்னலங்குறைவுறாமனடந்ததாலெமெல்லாம். (கூ)

மன்னவன்விமானமீதுவானுலகடைந்துமீள்வென்
றுன்னுபசசரனென்றோர்பேர்தோன்றலுக்கடைந்ததப்பாற்
பின்னைவற்கைவர்மைந்தர்பெருந்திறலோர்கடோற்றி
மின்னணிபினர்வெவ்வேறுமேதினிகாத்திருந்தார். (ய)

மாதவத்தொருவனுனவசுநகர்மருங்கிலோர்சார்
சீதளமுயர்ந்தசுத்திமதியெனுஞ்செழும்பேர்கொண்டு
போதுநதிபின்பாங்கர்புரவலன்பயிலும்போதின்
மீதுறவுயர்ந்தகோலாகலமெனும்விலங்கல்கண்டான் (யக)

மங்குறவுயர்ந்தகொற்றமால்வரைதனைப்பதத்தி
னெஞ்சவேமிதித்தெறிந்தானிருநதிதன்னில்வீழ்ந்த
வஞ்சொலார்வசுபதத்தனெனும்பெயரானுநேரில்
வஞ்சிநற்கிரிகையெனுமாதுமவ்விடத்துதித்தார். (யஉ)

பொருப்புமாநதியுமொன்றாய்ப்பொருந்தியபோதிற்றேவர்
விருப்பறச்சிறுவனோடுமெல்லியதோன்றக்கண்டே
மருப்பினமுலைசேர்சுத்திமதியெனுநதிவளர்த்தே
திருக்கிளர்தேவராரும்வியந்திடத்திகழுநாளிற். (யங)

பாலமுதளித்துநாளும்பண்புடன்வளர்த்தநாளிற்
சிலமார்பதனும்நேராச்சிறுவனுமலையுதித்த

கோலநற்றிருவைவொத்தகொடுங்கணாள்கிரிகைமாதுஞ்
சாலவேவனப்பிலாழ்ந்துதாயருகிருக்குநாளில். (௧௪)

வசுவெனுமரசனந்தமாநதியடைந்துமீளக்
கசியுறுகிரிகையென்னுங்கன்னியைக்கண்டபோதி
லொசியுறுமிடையுநீலவொண்கணுமுயர்ந்தசைந்தே
யிசைவுறுதனமுங்கண்டேயார்கொலோவெனவயிர்த்தான். (௧௫)

மதியமோவதனமென்பான்வானமோமருங்குலென்பா
னிதியமோவுடலமென்பானீள்விழிக்கணையோவென்பான்
புதியமோகனமின்னெங்குப்புகுந்ததோவென்பான்மன்ன
னதியமோர்புறத்திருந்தேதமதன்கணைநலியநொந்தான். (௧௬)

வார்குறுமுலையரந்தமன்னவன்றபரங்கண்டே
யேகியக்கன்னிதன்னேரடிசைவுறமொழிகள்கூறிச்
சேகுறுநதியளித்தசெல்வியென்றுணர்ந்துகாத்தார்
போகியவனையாருங்குப்புகுந்துமாநதிக்குரைப்பான். (௧௭)

அன்னையாயுலகங்காக்குமணங்கனையருளாலின்னே
நின்னுடைச்சிறுமிதன்னைநேர்வையோவடியேற்கென்ன
பொன்னனைநனையுமந்தப்புகழ்சிறுவனையுமீந்து
முன்னவர்வரவுங்கூறிவிடுத்தனண்முதன்மைநோக்கி. (௧௮)

வேந்தனுநகர்வந்தெய்திவிளங்கிழைதனைமணந்து
தோய்ந்தவடனங்கண்மார்பிற்றிளைந்திடவின்பமுற்றி
யீந்தமற்குமரன்சேனைக்கிறைவனாயிருக்கநல்கி
மாந்தளிர்மேனியாளைப்பிரிகலன்வாழுநாளில். (௧௯)

பஞ்சடிப்பருமவல்குற்பணைமுலைக்கனிவாய்த்தீஞ்சொற்
செஞ்சுடர்த்திலதவின்பத்திருநுதற்கருங்கண்வல்லி
விஞ்சுடைக்காமமென்னும்வலையிற்றளையுநாளி
லஞ்சிடக்கருப்பந்தாங்கியுற்றனள்கிரிகையென்பாள். (௨௰)

விலங்குடைபூக்கொணர்ந்துவிளங்கிழைக்கருத்தவென்றே
குலங்களிற்குரவமொய்த்திக்கூறலால்வேட்டம்போந்தே

கலங்கிடவிருகமோட்டிக்கடுங்கணை தூண்டிக்காதி
யலங்குறுவனத்திருந்தானலரிவாரிதுயிலாழ்ந்தான். (௨௧)

மங்கையாங்கிரிகைநீலவார்குழற்புனைந்திருண்ட
கொங்குலவுந்தெங்குழொடக்காதலிமுகத்தைநேராந்
திங்கள்வந்துதிப்பநோக்கித்தேனுறுந்தொடையன்மார்ப
னங்கொருபுடையில்வைகியலர்க்கணைக்கிலக்கதானான். (௨௨)

வாடுமோமாரன்போரான்மயங்குமோமருண்டிடுன்றன்னைத்
தேடுமோநோயோசிந்தைதியங்குமோசேர்ந்தநாளி
லூடுமோமகிழுமோவென்றுயிர்த்துரியாளையுன்னி
நீடுமேகலையின்மேல்வந்தனெட்டுயிர்த்தயர்ந்தான்மாதோ. (௨௩)

மனதிடையிருந்தகாமவல்லிடும்பையோதரங்கள்
கனவிடைமார்பிலாழக்கலந்தவளுறங்கிவைத்தன்
புனிதவிந்துலைவைக்கைவிட்டபோதினிற்புவிவிழாமற்
றனிவுறத்துகிலினேற்றேதூயவனுணர்ந்தெழுந்தான் (௨௪)

மரனிடைவைத்திருந்தவல்லூறுதனையஃழத்தே
விரவுமிந்திரியநலகிவிலங்கிழைக்களித்தியென்ன
விரவிடைச்செலுத்தினான்மற்றிதுவுந்தன்னலகிற்கவ்வி
விரைவினிற்படர்ந்ததாங்கோர்விகங்கம்வந்தடுத்ததாலோ. (௨௫)

உணவினையலகிற்கவ்வியுற்றதென்றுன்னியோடி
நிணமுறுமூக்காற்கொத்திநின்றமர்புரிதலாலே
தலைவலவீரியத்தைத்தன்வாய்தவறுறவிடுத்ததிப்பான்
மணிசெறியமுனையாற்றின்வந்துவீழ்ந்தொளிர்ந்ததன்றே. (௨௬)

வாகைவல்லூறுமீண்டுமன்னனுக்குரைப்பவன்றான்
சோகமோடிருந்துகீழ்ப்பாற்சூரியனொன்றுமுன்னர்
நாகமேமுதலவானநாற்பெரும்படையுமேற
மேவிமாநகரஞ்சார்ந்தேயிலவலவருடன்வாழ்ந்தானே. (௨௭)

ஈங்கொருகன்னிமுன்னுளியக்கரில்லகத்தில்வந்தாள்
பாங்குளபிரமனிட்டபகருஞ்சாபந்தாங்கி

வீங்குநீர்யமுனையூடுமீனமாயுழல்வாளைக்கண்டே
யாங்கவையிரண்டுகூறும்வித்துவையுருந்திருளே. (௨௭)

தரித்தனனுதரத்தாடுதகுதியோராண்டுநீங்கி
விரித்தநற்றினத்திலோர்நாண்மீடுப்பார்களெய்தித்
திரதசினியலைகள்கட்டித்தின்புனற்றிவலைவாளைப்
பரப்பினிற்றெறிப்பவோட்டிப்பலசுமைகவர்ந்தபின்னர். (௨௮)

பிடித்தனரனைடமீனம்பிளந்தனாமகனும்பெண்ணு
மடுத்ததிலிருந்த தோன்றியற்புதமடைந்தனாராய்
வடுத்தவிர்தாதராசனவையிடைவைத்துரைத்தா
ரொடுத்தவன்வளர்த்தான் சாபமிவளொழித்துலகஞ்சார்ந்தாள். (௨௯)

அல்லவனவளர்கநாளிலப்பெரும்புதல்வன்மச்
சன்னிலையனெனக் கொலநாயகனுகிநின்றான்
றுன்னியமச்சகந்தியெனப்பெயர்சொற்றதோகை
பன்னியமனைகடோட்டம்பணிப்பவளாயிருந்தாள். (௩௰)

சிலதுநாள்கழிதல்பின்னர்த் திறன்முனிவசிட்டன்சிறந்த
குலமுனிசத்துமைந்தனகுளிர்பராசரனெனுந்தோங்குங்
கலைவலானவணைவந்தெய்திக்கன்னியைக்கண்டுசேர்ந்தே
தனனுடைமதனவெம்பூப்புறவிந்திடத்துயருழந்தான். (௩௧)

வாட்டடங்கண்ணிநின்பான்மையயவிற்சிறந்தேதனின்னே
நீட்டியதொய்யிலுங்குஞ்செழுமுலைத்தடத்திற்சேர்க்க
நாட்டுவையெனனுமாதுநானெறும்பிரம்பவனைநகத்தே
தோட்டுவார்குழலாளிசசொற்றாயருக்கியலோவென்றாள். (௩௨)

(வேறு.) கன்னியானவிரதத்திற்கழிந்தவ
ளன்னநீர்மையயகற்றுதலேற்குமோ
பனனுமேமனிபுலாலகமழ்ப்பான்மைமகன்
டென்னைநீதொடவேற்குமோவென்றாள். (௩௩)

கற்றமாமுனிகன்னியைநோக்கியே
யுற்றதீவ்விரதங்குறைவுற்றிடா

இற்றையேமுதற்கந்தமியங்குநின்
பெற்றியாருடலெலாந்துணைபேசினான். (௩௫)

வரமளிக்கமடந்தையுமவ்விடைக்
கருதுமோசனைகந்தியென்றுயினா
டிரமியற்றும்பணியிற்றிவாகரன்
கரமறைத்துக்கலந்தனன்கன்னியை. (௩௬)

அன்னகாலையிலாரணங்கன்னவண்
மன்னுமேமவயிற்றிலுதித்தனன்
சொன்னவேதவியாதன்றுகளற
வென்னவோதினன்பின்னுமியம்புவான். (௩௭)

வந்தமைந்தன்வணங்கித்தன்றாய்தனை
யெந்தவேளையிலுன்னினுமெய்துவன்
சிந்தைகொண்டுசிறப்புடன்வைகெனத்
தந்தையோடுவனந்தனிற்சார்ந்தனன். (௩௮)

வைகியாங்குவருந்தித்தவம்புரிந்
துய்கையாமறையோதிப்புராணங்கள்
மெய்கொள்பத்துடனெட்டும்விளம்பியே
செய்கையானபின்செப்பினன்பாரதம். (௩௯)

ஒற்றைவெண்மருப்போங்கன்முகத்தினா
னிற்றகோடுகொண்டேமப்பொருப்பிடை
முற்றுந்தீட்டிமுடித்தனன்பாரதங்
கற்றுளோர்கதிகண்டிடக்காதலால். (௪௰)

அன்னதூய்மையுநன்மையுமாகவே
சொன்னபாரதந்தூய்மறையானதா
லின்னுமான்முதலாயிமையோரெலா
மன்னும்பூமிசைவந்துதித்தார்களே. (௪௧)

என்றுகூறவிராசவமோதய
னன்றுவானவர்ஞாலத்துதிப்பதென்

னின்றுகாரணமென்றனக்கோதுவாய்
வென்றியோயெனமீட்டும்விளம்புவான். (௧௨)

வியாசருற்பவச்சருக்கமுற்றிற்று. ஆகூ கவி. ௲௱௬௰௨.

பிரபஞ்சஉற்பவச்சருக்கம்.

வருசமதங்கிநேயமைந்தனும்பரசிராமன்
பொருவருமரசர்தங்கள்புணரியையிருபானோடு
மொருமுறைமுடித்துச்சோருமுதிரத்தாற்றந்தைக்கன்பாற்
றருகடனியற்றுநாளிற்றவிர்ந்ததாலரசரீட்டம். (௧)

தரணியைத்தாங்குமன்னர்தங்குலநீங்கலாலே
வருணமுநெறியுஞ்சிந்திமாயுமென்றுள்ளங்கொண்டே
கருணையாலரசமாதரிரந்திடக்கசிந்தவேதா
பருணிதருனாக்கும்வண்ணஞ்சந்தானம்பணித்திட்டாரே. (௨)

உலகினிற்புதல்வர்தோற்றியுறுநெறிமுறைவழாமற்
றலமெலாங்காக்கலானார்சார்ந்துளபுதல்வரெல்லாங்
குலமுறையதனில்வேறோர்கொடுமைகண்டிலராய்க்காப்ப
விலகுயிர்த்தொகைகண்முற்றும்விருத்தியாய்ப்பரந்தவன்றே. (௩)

நீதிகடவீராவாற்றனெறிவல்வேதியரும்வேந்தர்
தீதறுகுலத்துளோருமிறந்திடார்சிறந்திருந்தார்
மேதினிவருத்திநொந்துசுமக்கொணாவிரகினாலே
யாதரம்பெருகவுன்னியவனிநாயகிசந்தித்தாள். (௪)

ஈசனுமயனுமாலுமிருந்திடுமமையநாடிப்
பூசனைபுரிந்துபோற்றிப்பொறுக்கிலேன்பாரமென்றாள்
வாசவனவரோடும்வானவர்நிருதரோடுங்
